# மும்மணிகள்

40
4·56

OFFICE OF THE REGISTRAR OF ... 
6 - OCT 1956
MADRAS

"ஹஸன்"

நன்மார்க்கப் பதிப்பகம்
காயல்பட்டணம்

# மும்மணிகள்

தைக்கா ஸாஹிபு நாயகம்,
உமர்வலி, முஹம்மது ஸாலிஹ்வலி
ஆகியோரின் சீரிய சரிதை

விளக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - OCT 1956
MADRAS

(விசேஷ ஆயரிப்பு)

"ஹஸன்"

✻

நன்மார்க்கப் பதிப்பகம்
காயல்பட்டணம்

இலங்கையில் 50 சதம்

விலை 0—6—0

N17
13698

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

## பதிப்புரை

நண்பர்களது வேண்டுகோள் மீது விசேஷமாகத் தயாரிக்கப் பட்டுள்ள 'மும்மணிகள்' என்ற இப்பிரசுரத்தில் காயல் நகரின் தவசிரேஷ்டர்களான அவுலியாக்கள் மூவரின் சரிதைகளும், ஞானவுரைகளும், தத்துவப் போதனைகளும் தரப்பட்டுள்ளன. அந்த அவுலியாக்களின் பரம் பரையிலுதித்த, எங்களது உள்ளன்பிற்குரித்தான பெரியார், ***தைக்கா முஹம்மது ஸுல்தான் அப்பா (மர்ஹூம்) அவர்களுக்கு இந்நூலை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகிறோம்.***

சங்கைக்குரிய உஸ்தாது அல்ஹாஜ் மா. மு. க. முஹிய்யத்தீன் தம்பி ஆலிம் முப்தி அவர்கள், சுகக் குறைவுக்காக சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்த தருண மாயிருந்துங்கூட, எங்கள் வேண்டுகோளை பெரிதும் மதித்து, இந்நூலை வாசிக்கச் சொல்லி சரிபார்த்து சில திருத்தங்களும் செய்தார்கள். அவ்வுதவியை நாங்களொரு போதும் மறக்க முடியாது. அந்தப் பேரறிஞர் அவர்களுக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, ஈருலகிலும் அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்தை அளிக்குமாறு இறைவனிடம் இறைஞ்சுகிறோம். இதைப் பிரசுரிப்பதில்

பெரிதும் ஆர்வங்காட்டி ஒத்துழைப்பளித்த வாலிப நண்பர் S. E. ஷெய்கு முஹம்மது இக்பால் அவர்களையும் பெரிதும் பாராட்டுகிறோம்.

உள்ளங்களில் தேம்பிக் கிடக்கும் மாசு, மரு நீங்கி அகத்தூய்மையும், ஆத்மிக வலிமையும் பெற்று ஒவ்வொருவரும் உண்மை முஃமின், முஸ்லிம்களாய் வாழவேண்டுமெனவும், நாமனைவரும் உள்ளத்தில் சாந்தியும், பேரின்ப பாக்கியமும் பெற்றுய்ய வேண்டுமெனவும் ஆவல்கொண்டு அதிகச் சிரமத்துடன் இதை வெளியிட்டு தங்கள் பால் அளித்துள்ளோம். குற்றங்குறை நீக்கி நன்மை காணக் கோருகிறோம்.

நமது முயற்சிகளை நல்ல சிறந்த முயற்சிகளாக அல்லாஹ் ஆக்கித் தருவானாக, ஆமீன். வஸ்ஸலாம்,

காயல்பட்டணம்,<br>14—2—1376.<br>20—9—1956.

உங்கள் ஆதரவை என்றும் விரும்பும்,<br>நன்மார்க்கப் பதிப்பகத்தார்.

# மும்மணிகள்

[நண்பர்கள் பலர் ஓர் விசேஷ தினத்தன்று உல்லாசமாகக் கூடி பேசிக்கொண்டிருக்கின்றனர். அவர்களது பேச்சுத் தொடர் ஊர் நிலைமைபற்றி, உலக நிலைமை எல்லாம் சென்று கொண்டிருக்கும் போது பத்ருஸ்ஸமான் என்ற நண்பர் வருகிறார்.]

**ப. ஸ:—** அஸ்ஸலாமு அலைக்கும்.

**நண்பர்கள்:—** வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு. நல்ல சந்தர்ப்பத்திலே வந்து சேர்ந்தீர்கள்.

**ப. ஸ:—** ரொம்ப ஜாலியாக பேசிக்கொண்டிருந்தீர்கள் போலும். எந்தக் கோட்டையை பிடிக்க திட்டம் போட்டு முடிக்கிறீர்களோ?

(நண்பர்களுள்) **அப்பாஸ்:—** திட்டமாவது, கிட்டமாவது? சும்மா பொழுது கழிக்கிறோம். அவ்வளவுதான்!

**ஸயீது:—** நண்பர்களே! நம் தோழர்களில் பதுருஸ்ஸமான் ஓர் ஆலிம் ஸாகிபு மாதிரி எல்லா நல்ல விஷயங்களையும் தெரிந்தவராக இருக்கிறாரே, அவரைக்கொண்டு ஏதாவது நல்ல விஷயம் பேச வைத்து நேரத்தை பொன்னான நேரமாக்கிப் பயன் பெறலாமே.

**அலாவுதீன்:—** அருமையான யோசனை! ஆமாம், ஆமாம். சகோதரர்களே! ஜனாப் பத்ருஸ்ஸமான் அவர்கள் மார்க்க உபன்னியாசம் செய்வார்கள்.

**நண்பர்கள் :—** மர்ஹபா! நாங்கள் அதை ஆமோதிக்கிறோம்.

ப. ஸ:— தோழர்களே! எந்தக் கோட்டையை பிடிக்கத் திட்டம் என்று நான் கேட்டதற்காக என்னையே பொறுப்பான ஒரு கோட்டைக்குள்ளே தூக்கிப்போட ஆரம்பித்துவிட்டீர்களே! நான் ஓதிப் பட்டம்பெற்ற ஆலிம் சாகிபு இல்லை. மார்க்க உபன்னியாசம், ஹதீது சொல்லும் தகைமையுள்ளவனாகவும் இல்லை. ஆனால், அருமையான இவ்வேளையை பயன்படுத்த ஒரு யோசனை சொல்லட்டுமா?

**நண்பர்கள் :—** சொல்லுங்கோ.

ப. ஸ :— இங்கே கூடியுள்ள அத்தனை நண்பர்களும் தனக்குத் தெரிந்த வரை நல்ல உபதேசங்களை எடுத்தியம்பி பரஸ்பரம் அறிவு ஞானத்தை பெருக்கிக் கொள்வோம். சம்மதம்தானா?

**கபீர் :—** ஆமாம், நீங்களெல்லாம் ஓதின பிள்ளைகள். படித்த பிள்ளைகள். என்னைப்போல சாதாரண பேர்வழிகள் என்ன சொல்லமுடியும்?

ப. ஸ:— அவரவர்களுக்குத் தெரிந்த ஒன்றிரண்டு வார்த்தைகளாவது சொல்லலாம், கிராஅத்தாவது ஓதலாம்.

முஹம்மது மக்கீ:— சரி, நான் கிராஅத்து ஓதுகிறேன்.

ப. ஸ:— தயவுசெய்து யாவரும் (அதபு) ஒழுக்கத்துடனும், அமைதியுடனும், மனப்பூர்வமுடனும் இருக்கும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். முஹம்மது மக்கீ, கிராஅத்து ஓதுங்கள்.

மு. மக்கீ:— (அவூது, பிஸ்மியுடன் அலா இன்ன அவ்லியா அல்லாஹி லா கௌபுன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன் (10 — 62, 63, 64)........ என்ற குர்ஆன் ஆயத்தை ஓதுகிறார்).

ப. ஸ:— மர்ஹபா, மர்ஹபா! திரும்பவும் அந்த ஆயத்தை ஓதுங்கள். (திரும்பவும் அவர் ஓதுகிறார்).



ப. ஸ:— நண்பர்களே! கிராஅத் ஓதின நண்பருக்கு ரொம்பவும் நன்றி செலுத்துகிறேன். அவுலியாக்களின் மகத்துவத்தையும், மாண்பையும் எடுத்துக் கூற வேண்டுமெனவே மனதில் திட்டமிட்டிருந்தேன். அதற்கேதுவாக இந்நண்பரின் வாயில் இந்த ஆயத்துகள் வந்ததன் மூலம் என் மனம் ரொம்பவும் உற்சாகங்கொள்கிறது. இன்ஷா அல்லாஹ் பேசத் தொடங்கும்போது அந்த ஆயத்துக்களின் கருத்துக்களை சொல்கிறேன். ஸயீத்! மனோரம்மியந்தரும் கீதங்களை இசையுங்கள், கேட்போம்!

**ஸயீது:—** (பாடுகிறார்)

**பல்லவி**

சொல்லுவீர் நமக்கிறைவ னொருவ னென்றே
உள்ளத்தில் உண்மை கொள்ளுவீ ரவனன்றி இல்லை என்றே (சொ)

**அனுபல்லவி**

அல்லு பக லென்னேரமு மவனே
ஆனந்தமாயடியார்கள் வேண்டிடும்
ஆதி நாயகனே ஆதாரமுடனே (சொ)

**சரணம்**

ஆதியந்த மில்லாத அருட் கொடையோன்
அன்னை பிதா மற்றெவரு மற்றவனை அன்புடையோன்
ஓதஉவமை இல்லாத அழகுடையோன்—செய்
கப்துல்காதிர் கீதமோதிடும் கீர்த்திக்குயருடையோன்—
கிருபையுடையோன் (சொ)

(மற்றவர்களும் சேர்ந்து பாடுகிறார்கள்)

அ. ஸலாம்:— இது நமது பாவலர் S. S. அப்துல்காதிர் அவர்கள் பாடியது தானே

**ஸயீது:—** ஆம் அவர்களின் பாடல் இன்னொன்று பாடட்டுமா?

***நண்:—*** **பேஷாக. நாங்கள் வேண்டுமானாலும் சேர்ந்து பாடுகிறோம்**

***ஸயீது:—*** *(பாடுகிறார்)*

***பல்லவி***

**சிந்தாகுலம் தாண்டி ஜீவசேமம் பெறலாண்டி — வேண்டி தனம்** **(சிந்)**

***அனுபல்லவி***

**கந்தங்கமழ் காரு கண்யன் கன்மமகற்றும் புண்யன்**
கற்பக முற்பனமேவிய சாகுரு பொற்பத சேவை புரிந்தவர் கேயுறும் **(சிந்)**

***மகுடம்***

கரும கர்த்தரும ரொலியின் புத்ரரடி
ஒரு மனத்தோடெவர் கருதினு மவர்க்குறும் **(சிந்)**
கனக ரத்னமணி இலங்கும் நகர்க்கதி
பதியாம் காஹிர் தைக்கா சாஹிபுன் னவர் குறும் **(சிந்)**

***ஸயீது:—*** இதன் சரணங்களும் பாடலாமென விரும்பினேன். ஆனல், அவை பூர்த்தியாக எனக்குப் பாடமில்லை. ஆகையால், ஜனாப் பதுரு அவர்களின் பிரசங்கம் ஆரம்பமாகலாம்.

***ப. ஸ:—*** சந்தோஷம். அருமையான பாடலைப் பாடிய இந் நண்பருக்கும் நமது நன்றி, இப்பாடல் மகான் தைக்கா ஸாஹிபு நாயகம் அவர்களின் மாண்பு பற்றி அழகாக எடுத்தியம்புகிறது. அவர்கள் ஜனித்த இப்பூபதி காஹிர்மா நகரில் அவதரித்த நமது பாக்கியமே பாக்கியம். அன்பர்களே என் மனம் மிகவும் மிகிழ்ச்சியடைகிறது. ஏன் அடையாது? மலர் மனத்திற்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அம்மலருக்கு அழகிய வர்ணங்கள் அமைந்திருப்பின் மகிழ்ச்சி அதிகரிக்கிறது. அத்துடன் சுகந்த நறுமணமும் அது பெற்றிருப்பின் பெருமகிழ்ச்சி உண்டாகிறது, அதே போன்று நண்பர்களைச் சந்தித்து



அளவளாவும் ஓர் ஆனந்தத்துடன், நற்போதனைகளைப்பற்றி சிந்திக்கும் நற்பேறு, அவுலியாக்கள் பற்றி தியானம் செய்யும் பெரும் பாக்கியம் கிடைப்பதெனின் சாமானியமா? நம் மதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். காஜாஜுனைதுல் பக்தாதி (ரலி) அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்: "அவுலியாக்களை நினைவு கூறுவதால் அல்லாஹ்வின் கிருபாகடாட்சம் கிடைக்கிறது, நாட்ட தேட்டங்கள் கைகூடுகின்றன" என்று.

***அவுலியாக்கள் எத்தகையவர்?*** அவர்கள் இறைவனின் நேசர்கள். அவனது சன்னிதான சாயுட்ச சமீபப் பதவி பெற்றவர்கள். அவர்களை நேசம் வைப்பதால் இறைவனின் நேசத்தைப் பெறமுடிகிறது. நாயகம் (ஸல்) அவர்கள் (அல்மர்உ மஅமன் அஹப்ப) "ஒருவன் யாரை நேசிக்கிறானோ அவரோடேயே ஆகியிருப்பான்" என்று சொல்லி இருக்கிறார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளையும், நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளையும் சிரமேற்கொண்டு திருமறை குர்ஆனை வழிகோலாகப் பூண்டு, தீனுல் இஸ்லாம் என்னும் சன்மார்க்க நெறியில் நடந்து, ஷரீஅத், தரீகத், ஹகீகத் என்னும் மன்ஸிலகளை செவ்வனே கடந்து, மஃரிபத் என்னும் சாஸ்வத பேரின்ப வீட்டை அடைந்து நித்திய ஜீவனைப் பெற்றவர்களே அவுலியாக்கள். உலக ஆசாபாசங்களில் சிக்காது, மனவிச்சைக்கு அடிமையாகாது, தன்னையுணர்ந்து தனது தலைவனையும் உணர்ந்து மெய்ஞ்ஞான இரகசிய அகமியத்தைத் தெரிந்து பரமானந்த நிலையை அடைந்தவர்களே அவுலியாக்கள். உண்ண, உடுக்க, உறங்க, சுகிக்க, பிள்ளைகுட்டி பெற மாத்திரம் வெறுமனே மனிதன் படைக்கப் படவில்லை என்பதைத் தெள்ளத் தெரிந்து கடைத்தேறுவதற்காக பசித்திருந்து, தனித்திருந்து' விழித்திருந்து ஜெயசீலர்களாய் ஆனவர்களே அவுலியாக்கள். அப்புண்ணிய புருஷர்கள் அல்லாஹ் ஒருவனையே தங்களின் இறைவனாக ஏற்று அல்லும் பகலும் அனவரதமும் அவனையே தியானித்திருந்தனர்; இமைப் பொழுது கூட அவனது சிந்தையை மறவாது போற்றினர். அவனல்லாத வேறெவரையும் அஞ்சவோ அடிபணியவோ

இல்லை. அகத்தாலும் புறத்தாலும் அல்லாஹ்வையஞ்சி (தக்வா) பக்தியுடன் வணங்கி முழுப்பற்றையும் அவன்பாற் செலுத்தினர். இத்தகைய உத்தம நல்லடியார்களுக்கு தனது அருட் கடாட்சத்தால் அல்லாஹ் சிறந்த சன்மானங்களையும், அருட்பேறுகளையும், (மர்த்தபா) பதவிகளையும் அளித்து மகத்துவ மேதைகளாக்கினான். ஞானவானில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அற்புதஜோதி நட்சத்திரங்களாகவும், நிறைமதிச் சந்திரன்களாகவும், ஜலால். ஜமால், எனும் பிம்பங்களைத் தரும் ஆதவன்களாகவும் அவர்களை ஆக்கினான். தனது நேசர்களான அவர்களுக்கு அற்புத ஆற்றல்கள் புரியும் இயல்பையும் ஈந்தான். அவர்களின் விசேஷ நிலைபற்றி ஓர் உதாரணங்கூறி விளக்குகிறேன். ஒரு சாதாரண இரும்புத் துண்டை எடுத்துக் கொள்ளுங்கள். யாரும் அதைத் தொடலாம். எவ்வித உணர்ச்சியும் இராது. அவ்விரும்புத்துண்டை சொற்பநேரம் அக்கினியில் போட்டு சூடேறச் செய்தால் அதன் நிறம் பழுப்பாகிவிடும். யாரும் அதை தீண்டமுடியாது. தொட்டால் கை கருகிவிடும். இரும்பு இரும்பாகத்தானிருக்கிறது. ஆனால், அதன் சுபாவம் அக்கினியின் சுபாவமாகிவிடுகிறதல்லவா? இதே போல அச்சாதாரண இரும்பின்மீது காந்த சக்தியை செலுத்தினால் அதற்கு காந்தசக்தியுண்டாகி விடுகிறது. வயர்கம்பியை சாதாரணமாக இருக்கும்போது யாரும் தொடலாம். ஆனால், அந்த வயர்கம்பியில் மின்சாரசக்தி பாய்ச்சப்பட்டால் அலட்சியமாக தொட முடியாது. தொட்டால் உயிருக்கு ஆபத்து. இவ்வாறேதான் அல்லாஹ்வின் ஜலாலியத் என்ற நெருப்புத் தன்மையும், ஜமாலியத் என்ற காந்த சக்தியும், விலாயத் என்ற மின்சார சக்தியும் பெற்ற அவுலியாக்கள் முதலில் சாதாரணமானவர்களாயிருந்தாலும் அப்பால் அகத்திலும், புறத்திலும், சொல்லிலும், செயலிலும், பார்வையிலும், கேள்வியிலும், தனிப்பட்ட விசேஷ மகத்துவமும், மாண்பும், சிரேஷ்டமும், சக்தியும் பெற்ற அற்புத மஹான்களாகிவிடுகிறார்கள்.

மேலும், நாயகம் (ஸல்) கூறி இருக்கிறார்கள் : ''எனது நல்லடியான் எனது நேசத்தை பெறுமளவுக்கு நபிலு என்னும் வணக்கங்கள் புரிந்து என் சமீபம் முடுகியவண்ணமிருக்கிறான்,



நான் அவனை ஏற்று நேசித்து விடுவேனாயின் அவன் கேட்கும் காதாகவும், பார்க்கும் பார்வையாகவும், பிடிக்கும் கையாகவும், நடக்கும் காலாகவும் இருப்பேன் ஏன்று அல்லாஹ் திருவுளமானான்''. இத்தகைய இறையருள் தாசர்களுக்கு அச்சமேது, பயமேது? துக்கமேது, துயரமேது? ஆகவேதான் (அலா இன்ன அவுலியா அல்லாஹி லா கௌபுன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன்) ''அல்லாஹ்வின் நேசர்களான அவுலியாக்களுக்கு அச்சம், துயரம் என்பதே கிடையாது. அவர்கள் (ஈமான்) விசுவாசம் பூண்டு தெய்வ பக்தியுடன் ஒழுகி நடந்த உத்தமர்கள். இவ்வுலகிலும் அவ்வுலகிலும் அவர்களுக்கு நன்மாராயச் சோபனங்களுண்டு. அல்லாஹ்வின் வார்த்தைப்பாடுகளுக்கு மாற்றம் கிடையாது'' என்று இறைவன் கூறியுள்ளான். அந்த ஆயத்துக்களைத்தான் நண்பர் முஹம்மது மக்கீ முதலில் ஓதினார்கள்.

அவுலியாக்கள் என்ற பேரண்ணல்களுள் ஒருவர்தான் தைக்கா ஸாஹிபு வொலி நாயகம். அவர்களின் திருநாமம் ஷெய்கு அப்துல்காதிர். தைக்கா சாஹிபு என்பது சிறப்புப் பட்டம். ஹிஜ்ரி 1191 ஸபர் பிறை ஐந்தில் காயல்பட்டணம் மகுதூம் தெருவில் அவர்கள் ஜனனமானார்கள். தந்தையவர்கள் உமர் வலியுல்லாஹ் என்பது உங்களுக்குத் தெரியும். இவர்கள் மாதிஹுர் ரஸூல் ஸதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களின் வழித்தோன்றல். ஸித்தீக்கு வம்சம். இவர்களுடன் பிறந்த சகோதரர்கள் ஐவர். (1) ஸெய்யிது அஹ்மது. (2) ஸெய்யிது முஹம்மது. (3) அஹ்மது கண்டு. (4) மஹ்மூது. (5) முஹ்யித்தீன் ஆகியவர்களாவர். இவர்களில் மூத்தவர் நமது தைக்கா சாஹிபு அவர்களே. இளையவர் முஹ்யித்தீன் அவர்கள். இதுபற்றி உமர் வலியுல்லாஹ் அவர்கள், ''நமது மக்கள்களின் நாமத்தின் புறத்தால் நாம் அப்துல்காதிரைக் கொண்டு ஆரம்பித்து முஹ்யித்தீனைக்கொண்டு முடித்தோம்'' என்று மகிழ்வோடு குறிப்பிடுவார்களாம். தைக்கா ஸாஹிபு நாயகம் அவர்கள் வளர்த்தியானவர்கள். ஒல்லிய சரீரம்— சிகப்பு நிறம் — சின்னஞ்சிறு தாடி—பரந்த மார்பு — மலர்ந்த

முகம்—புன்சிரிப்புடன்கூடிய உதடு—பளபளத்த சரீரம் முதலியன அவர்களின் சரீர வர்ணனை குறிப்புகளாம். சிறுபிராயத்திலேயே குர்ஆன் ஷரீபு முழுவதையும் மனனஞ்செய்து, முதுமையிலும் அதை மறக்கவேயில்லை. தமது பிதா அவர்களிடமும், உஸ்தாதுகளிடமும் ஆரம்பக் கல்விகளைப் பயின்றார்கள். சக மாணவர்களைவிட ஹதீது, ஞான ( தஸவ்வுபு ) கல்விகளில் இவர்களே விசேஷ திறமை பெற்றிருந்தார்கள். கற்றதோடு நின்றிடாமல் கற்றபடி ஒழுகியும் வந்தார்கள். "எவர் கற்றபடியொழுகி நடந்தாரோ அவருக்கு அவர் அறியாத ஞானங்களெல்லாம் இறையருள் சார்பிலிருந்து ஈயப்படும்'' என்ற நாயக மொழிக்கிணங்க மஹான் அவர்களுக்கு இறையருள் கல்வி (இல்மு லதுன்னி) சித்தியாயிற்று.

நண்பர்களே! நாம் வெறுமனே கல்விகளை அள்ளிக்கட்டித் தூக்கிச் சுமந்தால் மட்டும் போதாது. கற்றதற்கொப்ப ஒழுகினால்தான் பயன். இன்றேல் எதுவும் பயனில்லை. குங்குமஞ் சுமந்த கழுதைக்குத்தான் ஒப்பாவோம். ''கமதலில் ஹிமாரி யஹ்மிலு அஸ்பாரா'' என்ற ஆயத்து இவ்விஷயத்தைப்பற்றி எச்சரிக்கிறது.

'' படிக்கும்படி நடக்கப் படிக்கா லோபிகள் மோட்சப்
பதமற்றுப் போனாலும் போகட்டும்''

என்று மஹான் குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்கள் சொல்கிறார்கள்.

மஹான் தைக்கா சாஹிபு நாயகம் அவர்கள் இறைவனின் ஆசையில் திளைத்து இரவெல்லாம் விழித்து வணங்கினார்கள்; பகல் எல்லாம் நோன்பு நோற்றார்கள். இவ்வாறாகப் பல்லாண்டு காலம் வணக்கம் புரிந்த அவர்களுக்கு அருட்கடாட்சம் வெகு விரைவில் கிட்டியது.

மஹான் அவர்கள் நன்மைகளை ஏவி தீயவற்றை விலக்கி (அம்ரு, நஹ்யு செய்து) வந்தார்கள். மார்க்கவிரோதமான காரியங்கள், அனாச்சாரங்கள், பிதுஅத்துகள் முதலியன நடக்கக் கண்டால் உடனே அதை விலக்கித் தட்டிவிடுவார்கள். அல்லாஹ்வுக்காக வென்று வாழ்ந்த அவர்கள் அவனுக்காகவே,



தாட்சணியம் பாராது, செல்வந்தர் களாயினும், தன்னினத்தவராயினும், நண்பராயினும் ஏவல், விலக்கல் செய்தார்கள். சகோதரர்களே! எவருடைய ஹிருதயத்தில் ஈமானின் சுடர் பிரகாசித்து விளங்குகிறதோ அவர் அல்லாஹ்வுக்காகவே வாழ்பவராக, ஏவல் விலக்கல் செய்பவராக இருப்பார். (குன்த்தும் கைர உம்மதின்......) ''சமூகத்தார்களில் எல்லாம் மிகச் சிரேஷ்டமான சமூகத்தாராக நீங்கள் ஆகிவிட்டீர்கள். நன்மைகளை ஏவுகிறீர்கள், பாபங்களை விலக்குகிறீர்கள். அல்லாஹ்வைக் கொண்டு விசுவாசம் பூண்டிருக்கிறீர்கள்'' என்று எம்பெருமானார் அவர்களின் சமூகத்தை அல்லாஹ் குர்ஆனில் புகழ்ந்து கூறியுள்ளான். ஆகவே, நம்மை இந்த உம்மத்தே முஹம்மதியாவில் ஆக்கிவைத்த அந்த ஒரு பேருபகாரத்திற்கே நாம் இறைவனுக்கு எவ்வளவோ நன்றி செலுத்தவேண்டும். எவ்வளவுதான் வணக்கம் புரிந்தாலும் அதற்கிடாகாது. இதோ, தக்கலை பீர்முஹம்மது ஸாஹிபு வொலியுல்லாஹ் அவர்கள் தங்களின் ஞானப்புகழ்ச்சியில் சொல்லியுள்ளதைக் கேளுங்கள்:-

ஆதம் பெருமக்களெல்லாரிலு நம்மை யன்பு கொண்டே
வேத நபி யிரஸூலும்மத் தாக்கும் வெகு நன்றிக்குப் பாதங்கள்
மேலுஞ் சிரங்கீழுமாய்ப் பத்து நூறாயிரமாண்டோதித் தவஞ்
செய்தாலும் போதாதா மன்றுகந்ததற்கே.

ஆஹாஹா! எவ்வளவு உண்மை. நமது ஸர்தார் நாயகம் (ஸல்) அவர்கள் ஏவல், விலக்கல் பற்றி சொல்லியிருக்கும் சில ஹதீதுகளையும் சிந்திப்போம். '' உங்களின் ஒவ்வொரு உறுப்பு மீதிலும் (ஸதக்கா) தரும கடன் உண்டு. நற் கருமங்களை ஏவுவதும் ஸதக்காதான். தீயகருமங்களை விலக்குவதும் ஸதக்காதான்.

உங்களிலொருவன் மார்க்கத்திற்கொவ்வாத வழி பிசகலான கெட்டகாரியத்தைக் கண்டால் அதை கையால் விலக்க வேண்டும். கைகொண்டு விலக்க சக்தியில்லையானால் நாவு கொண்டு விலக்கவேண்டும். அதற்கும் இயலாதிருந்தால் ஹிருதயத்தை கொண்டாவது வெறுப்பைக்காட்டி இருக்க வேண்டும். இது ஈமானில் மிகவும் பலஹீனமானதாகும்.

எந்த ஆணுவது, பெண்ணுவது கெட்ட விஷயத்தைக் கண்டு விலக்காமற் போனல் அவர்களின் இதயத்திலிருந்து ஈமானின் மூன்றிலொரு பங்கை அல்லாஹ் போக்கி விடுவான்.

என்னுடைய சமூகத்தார்கள் அநியாயக்காரனைப் பார்த்து அநியாயக் காரன் என்று சொல்லப் பயப்படுவார்களாயின் அவர்களையும் அந்த அநியாயக்காரர்களுடைய கெடுதலில் கூட்டாக்கப்படும்'' என்று இவ்வாருக நாயகம் (ஸல்) கூறியிருக்கிருர்கள். பெருமானரின் இரண்டாவது கலீபா, உமர் பாருக் (றலி) அவர்கள் ''உங்களின் உடற்பிறந்தாணுகிய முஸ்லிம் சகோதரனில் ஒரு வழி பிசகுதலைக் கண்ணுற்ருல் அவனுக்கு நேரிய பாதையைக் காட்டித்திருத்துங்கள். அதற் கனுசரணையாக அவன் (ஹக்கில்) விஷயத்தில் அல்லாஹ்விடம் துஆக் கேளுங்கள். அவ்வாறு செய்யாமல் அவ்வழி பிசகுதலில் நீங்களும் கூட்டாகி, அவனுக்கனுசரணையாகி அவன் பேரில் ஷைத்தானுக்கு ஒத்தாசை புரிந்துவிடாதீர்கள்'' என்று எச்சரித்திருப்பதையும் நாம் கவனித்து நடக்கவேண்டும்.

மஹான் தைக்கா ஸாஹிபு நாயகம் அவர்களின் திருச் சன்னிதானத்திலே எப்போது பார்த்தாலும் அறிஞர்கள், ஆலிம்கள், ஞானிகள், ஹகீம்கள், மகாமேதைகள் ஆகியவர் களின் கூட்டம் நிறைந்திருக்கும். அச்சமுகத்தில் இல்மின் இனிய காற்றும், மஃரிபத்தின் மலர்மணமும் ஒருங்கே கலந்து பேரானந்தத் தென்றல் வீச அல்லாஹ்வின் றஹ்மத் எனும் சாரல் இருந்துக்கொண்டே இருக்கும்.

தமது தந்தையவர்களின் போதனைக்கேற்ப, அரேபியாவிலுள்ள ஹளரமவுத்தைச் சார்ந்த ஷெய்கு இபுனு ஸெய்யிது முஹம்மது ஜிபுரீ (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்களை தங்களின் (ஷைகு) ஞானகுருவாக ஏற்று அன்னரிடம் (பைஅத்து) தீட்சை பெற்ருர்கள். ஞானவழி நடப்பதற்கு அத்தியாவசியமாக ஓர் ஷைகின் தொடர்பைப் பெற்றேயாக வேண்டும். சம்பூரண (காமில்) ஷைகுமார்கள் காலத்தின் தீபஸ்தம்பங்கள் அவர்களைக் கொண்டு ஞானத்துறை செல்ல வேண்டும். இது பற்றி அநேகர் அறியாமலும், அறிய கவலையில்லாமலும்



உள்ளனர். இஸ்லாத்தின் இடையே தரகர்கள் எதற்கு என்ற கேள்வியும் எழலாம். ஆனல், நன்கு கவனிக்க வேண்டும். ஷைகுமார்கள் தரகர்களல்ல. அவர்கள் நாயகம் (ஸல்) அவர் களின் பிரதிநிதிகள், அனந்தர வாரிசுகள். (அல்உலமாஉ வரததுல் அன்பியாஇ) ''உலமாக்கள் நபிமார்களின் அனந்தர வாரிசுகள்'' என்றும், (உலமாஉ உம்மத்தீ க அன்பியாஇ பனீ இஸ்ராயில்) ''எனது சமூகத்திலுள்ள உலமாக்கள் இஸ்ர வேலர்களின் நபிமார்கள் போன்றுள்ளார்கள்'' என்றும், (அஷ்ஷைகு பீ கௌமிஹி கன்னபிய்யி பீ உம்மத்திஹி) ''நபியாகிறவர் தமது உம்மத்திலிருப்பதே போன்று ஷைகாகிறவர் தமது கூட்டத்தாரிடையே இருக்கிருர்'' என்றும் எம்பெருமானர் (ஸல்) ஞான மஹான்களான காமில் ஷெய்குமார்களைப் பற்றி உரைத்துள்ளார்கள்.

(யாஅய்யுஹல்லதீன ஆமனு அதீவுல்லாஹ, வ அதீவுர் ரஸூல வஉலில் அம்ரி மின்கும்) ''விசுவாசிகளே! அல்லாஹ் வுக்கு வழிபடுங்கள். மேலும், ரஸூலுக்கும், உங்களில் (அம்ரையுடையவர்) காரியகர்த்தர்களுக்கும் வழி படுங்கள்'' என்ற திருமறை வசனத்தில் அம்ரையுடையவர்கள் என்பதன் கருத்து தீனை பரப்பக்கூடிய உலமாக்களான அவுலியாக்கள், ஷைகுமார்கள் என்று தப்ஸீர் ருஹுல் பயான், தப்ஸீர் கபீர் முதலியவற்றில் சொல்லப் பட்டுள்ளன. ''ஒவ்வொரு வலியும் நூஹ் (அலை) உடைய கப்பல் என்று அறி இவர்களை நேசித்தால் நாசம் என்ற வெள்ளத்திலிருந்து நீ தப்பிக்கொள்வாய் — அல் லாஹ்வுடன் இருக்கப் பிரியமுள்ளவர்கள் அவுலியாக்களுடைய சமுகத்தில் இருப்பார்களாக! அவுலியாக்களுடைய சமுகத்தை விட்டு விலகி இருப்பீர்களேயானல் உள் ரங்கத்தில் அல் லாஹ்வை விட்டு விலகி யிருக்கின்றீர்கள்'' என்று மௌலானு ரூமி (ரஹ்) மஸ்னவீஷரீபில் குறிப்பிட்டுள்ளார்கள். ''என் னுடைய அவுலியாக்களை யாராயினும் மனம் நோகச் செய்தால் என்னுடன் சமர்புரிய தயாராயிருந்துக் கொள்ளட்டும் என்று அல்லாஹ் கூறியிருப்பதாக'' நாயகம் (ஸல்) உரைத் துள்ளார்கள்.

"விசுவாசிகளே! அல்லாஹ்வுக்கு அஞ்சி நடவுங்கள். மேலும், அவனளவில் வஸீலாவைத் தேடிக் கொள்ளுங்கள். மேலும், நீங்கள் சித்தி பெறுவதற்காக ஜிஹாதும் செய்யுங்கள்" என்று இறைவன் தனது திருமறை குர்ஆனில் அருளியுள்ளான். அல்லாஹ்வுக்கு அஞ்சி நடத்தல் என்பது அவனது வேதனையை அஞ்சி அவனுக்கு மாறு புரிவதை தவிர்த்துக் கொள்ளுதல் என்பதாம்.

வஸீலா என்பது சுவர்க்க அந்தஸ்துகளில் மிகச் சிறந்தது என்று அத்தாவு (றஹ்) கூறி இருக்கிறார்கள். நற்கிரியை (அஃமாலுஸ்ஸாலிஹாத்து) கள் மூலம் இறைவன் சமுகம் நெருங்குவதும் வஸீலாவாகும். இறைவன் சமீபம் முடுகுவதற்கு காமிலான ஷைகை வழிகாட்டியாகப் பூணுவதும் வஸீலாவாகும். இதுவே மிக விசேஷமானதாகும் என்று உலமாக்களான மஹான்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இதே கருத்தை முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி (றலி) அவர்களின் மவ்லிது சிரந்தத்தில் ஸதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களின் சிஷ்யர் மஹ்மூது தீபி (றஹ்) வரைந்துள்ளார்கள். தப்ஸீருல்ஹமீது என்ற கிரந்தத்தில் இவ்வாயத்திற்கு வியாக்கியானம் எழுதப்பட்டு கடைசியில், "அறிந்துகொள்! வஸீலாவை தேடவேண்டும் என்பதாக இந்த ஆயத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே நமக்கு அவசியம் வஸீலா வேண்டும். வஸீலா இல்லாமல் அல்லாஹுத்தஆலாவின்பால் சேருவது முடியாத காரியம் இந்த வஸீலாதான் பாரவான்களான ஹக்கீகத்துடைய உலமாக்களும், தரீக்கத்துடைய ஷெய்குமார்களும் ஆவர்" என்று வரையப்பட்டுள்ளது. இந்த ஆயத்திலுள்ள வஸீலா என்பதற்குக் கருத்து காமிலான அவ்லியாக்கள்தான் என்று தப்ஸீர் ரூஹுல் பயானிலும் சொல்லப்பட்டுள்ளது.

அருமை நன்பர்களே! இதுவரை சொல்லிவந்ததிலிருந்து தாலிபு என்னும் ஞானவழி நடப்பவனுக்கு அவசியம் ஓர் ஞானகுரு (ஷைகு) தேவை என்பதை தெரிந்திருப்பீர்கள். அறிஞர் இக்பால் அவர்கள் கூறிய மொழியும் ஞாபகம் வருகிறது "தூர்ஸீனாவின்மீது யாசகனாய் நிற்கிறாய். ஏனெனில்



உன் ஆத்மா தானாகவே தன்னை அறியவில்லை- துணிந்து முன்னேறு. ஒரு சரியான மனிதனைத் தேடி அடை. அந்த விசாரணையில் இறைவனே உதவி புரிகிறான்" என்று அவர்கள் உரைத்துள்ளார்கள். "எவனுக்கு குரு இல்லையோ அவனுக்கு ஷைத்தானே குருவாக இருக்கிறான்" என்று அபூயஸீதுபிஸ்தாமி (றலி) கூறி இருக்கிறார்கள். "ஸ்தூல சரீரங்களின் சுகத்தை வைத்தியரிடம் கேள். அவர் ஜடவைத்தியர். ஆத்மீக சுகத்தை இறைவனது நேசர்களான மெய்யடியார்களிடம் கேள். அவர்தான் ஆத்மீக வைத்தியர்" என்ற கருத்தை மௌலானா ரூமி (றஹ்) மஸ்னவீ ஷரீபில் சொல்லி இருக்கிறார்கள்.

"ஷைகுடைய துணையில்லாமல் அறநெறி நடப்போர்யாரும் எந்த இடத்தையும் சேரமுடியாது. பிறர் உதவியில்லாமல் வில்லானது தானாகவே அம்பை எந்தத்தலத்திலும் செலுத்தாது" என்று கனி காஷ்மீரி (ரஹ்) உரைத்துள்ளார்கள்.

"குருநாதருக்குத் தொண்டு செய்வது மிக அற்புதமான இரசவாதம். யான் அவரது காலின் கீழுள்ள மண்ணாயினமையால் இத்தகைய பெரும் பதவியை எனக்களித்தார்" என்று ஹாபிஸ் (ரஹ்) மொழிந்துள்ளார்கள்.

எந்த அவ்லியாக்களை எடுத்துப் பார்த்தாலும் அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு ஷைகாக பெரியவர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்தே அவருக்குக் கட்டுப்பட்டு நடந்தே, பணிவிடை புரிந்தே, அவரின் பொருட்டால் பெரும் பதவிகளை அடைந்துள்ளனர் என்பதையே காணுகிறோம். ஹஜ்ரத் கௌதுல் அஃலம் (றலி), "எங்களுடைய வழிக்கும் அந்த அவ்லியாக்கள்தான் வழிகாட்டிகள். நாம் ஆதரவு வைப்பதற்கு அவர்களே போதுமான புதையல்கள். அந்த அவ்லியாக்களை பின்பற்றியவன் நேர்வழி பெறுவான். எவன் தொடரவில்லையோ அவன் கெட்டான்" என்று ஐனிய்யாவில் கூறி இருக்கிறார்களாம்.

இத்தகைய சிறப்பான ஓர் பாக்கியத்தை மஹான் தைக்கா ஸாஹிபு நாயகம் தங்கள் குருநாதரிடம் தொடர்பு கொண்டதன் மூலம் பெற முடிந்தது. காஹிரா என்ற அற்புத பூமியில், உமர்

என்ற உயர் சுரங்கத்தில் விளைந்த அருமை வைரம். அதை நூறுன் அலாநூர் என்று அதிசுடருடன் ஓங்கச் செய்யத் திறமையுள்ள காமிலான விவேகி சாணைபிடித்து பரிபக்குவப் படுத்துவதென்றால் அதனுடைய அருட்பெருஞ் சோதி பற்றி சொல்லவா வேண்டும்!

அகத்தூய்மை ஏற்பட்டு மனப்பிரகாசமுண்டாக (அனானியத்து) நான் என்ற தன்மையை இல்லாமலாக்கவேண்டும். அப்போதுதான் நபுஸின் இழிய தன்மை நீங்கும்; துற்குணம் மாறும். மனத்திரை அகலும். கசடு போகும். இத்துறையில் புரியப்படும் ஆத்மிகப் போராட்டத்திற்கே பெரிய (ஜிஹாது) போர் எனப்படும். ஜிஹாது இரு வகைப்படும். புறத்திலுள்ள பகைவர்களோடு யுத்தம் புரிவது ஒருவகை. இது சிறிய ஜிஹாது. அகத்திலுள்ள பகைவர்களோடு யுத்தம் புரிவது மற்றொரு வகை. இதுவே பெரிய ஜிஹாது. இப்பெரிய ஜிஹாதில் வெற்றிகண்ட நமது தைக்கா ஸாஹிபு நாயகம் அவர்கள் ஞானப்பால் குடித்து பேரமுதருந்தி வையாளி போட வாரம்பித்தார்கள். அவர்களுக்கு அடிக்கடி ஜலாலியத்து மிகைத்து (ஜதுபுடைய ஹால்) தன்னை மறந்த நிலை ஏற்பட்டது. இரவு பகலாக எதுவும் அருந்தாமல், ஜனங்களை விட்டொதுங்கித் தனித்து தைக்காவில் கல்வத்திருந்தார்கள். அவர்களிரு கண்களும் தூக்கமென்பதையே உணராமல் பல காலம் விழித்திருந்தன. அவர்கள் தனித்திருந்துத் தவம் செய்த தைக்காவினுள் பக்கம் ஏக ஜோதி மயமாய் இலங்கி பக்கத்திடங்களையும் பிரகாசிக்கச் செய்ததாம். அவர்களது பேச்சுக்கள் பெரும்பாலும் சிலேடையாகவும், ஈரருத்தமுள்ளனவாகவும் இருக்குமாம். தமது முரீதுகளை அவர்கள் றெம்பவும் சோதனை செய்வது முண்டாம். ஆனால், உண்மையான முரீதுகள் அவற்றைக்கண்டு விரண்டோடாது பற்றுதலோடும், பொறுமையோடும் இருப்பார்களாம். ஞானக் கல்வியில் பிரீதியுடைய ஒருவர் தைக்கா சாஹிபு நாயகம் அவர்களிடம் முரீதுபெற கோரிக்கை செய்தார். அப்போது அவர்கள் ''என்னிடம் என்ன இருக்கிறது? தட்டலும், தடவலும்தான் இருக்கிறது?'' என்றார்களாம். இவ்



வார்த்தையை சாதாரணமாகப் பார்க்கும்போது ஒன்றும் தெரியவில்லையல்லவா? அவர்கள் வெற்றிலை தின்பதற்காக உரலில் பாக்கைப் போட்டு தட்டுவதையும், வெற்றிலையில் சுண்ணாம்பை தடவுவதையும்தான் குறிப்பிடுகிறது போலுள்ளதல்லவா? ஆனால், அவ்வார்த்தையின் உட்கருத்து வேறு. அந்த மனிதர் விஷயமறிந்தவர். அதன் உட்கருத்தை கிரகிக்கும் இயல்புடையவர். ஆகவே, அவர் சந்தோஷமுடனே கூறினார், அதுதானே வேண்டும், அதற்காகத்தானே வந்தேன் என்று. மஹான் அவர்களின் அவ்வார்த்தைக்கு விளக்கமாவது :— கல், ரத்தின வியாபாரிகள் துணிக்குள் கையை மறைத்து கைகள் மூலம் சமிக்ஞையாக விலை பேசுவதை பார்த்திருக்கிறீர்கள் தானே! அச்சமிக்ஞையில் உள்ளங்கையை தட்டினால் ஐந்து என்றும், சிறுவிரலை தடவினால் ஆறு என்றும் அருத்தம். அவர்களது பேச்சிலிருந்து ஐந்தும், ஆறும்தான் என்னிடம் இருக்கிறது என்று அவர்கள் சொன்னதாக விளங்குகிறது. ஐந்து என்பது இஸ்லாமின் ஐம்பெருங் கடமைகளையும், ஆறுஎன்பது ஈமானின் ஆறுஅம்சங்களையும் சுட்டிக்காட்டுகிறது. ஈமானும் இஸ்லாமும் செவ்வனே அமைந்துவிட்டால் இனி வேறென்ன வேண்டும்? மேலும் இவ்வைந்துக்கும், ஆறுக்கும் வேறொரு தத்துவ விளக்கமும் சொல்லலாம். அரபியில் அப்ஜது கணக்கின் பிரகாரம் ஹே என்ற அட்சரம் ஐந்து. வாவ் என்ற அட்சரம்ஆறு. ஹேயும் வாவும் சேர்ந்து ஹுவாகிறது. ஆகவே என்னிடம் ஹு(இறைவன்)தான் உண்டு என்ற தத்துவத்தை அவர்கள் சொன்னதாகவும் கருத்துக்கொள்ள இடமுண்டு. அவர்களது வார்த்தைகள் பல இவவாறாகவே வேடிக்கைபோலவும், ஆனால், அர்த்தபுஷ்டியுடையதாகவும் இருந்தன.

மஹான் தைக்காஸாஹிபு அவர்கள் யாருக்கும் அன்பராயிருந்து உதவினார்கள். ஏழைகளின் பங்காளியாயிருந்து ஆதரித்தார்கள். பந்துமித்திரர்களை ஆதரித்தார்கள். குமர்ப்பெண்களை கரை சேர்ப்பதில் அதிக சிரத்தை காட்டினார்கள். அவர்கள் பல அதிசய அற்புதங்களை நிகழ்த்தினார்கள். அன்பியாக்களிடம் முஃஜிஸாத்துகளை வெளியாக்கிய இறைவன் அவுலியாக்களிடம் கராமாத்துக்களை வெளியாக்குகிறான். தைக்காசாஹிபு

நாயகம் அவர்களின் கராமாத்துக்கள் ஏராளமுள்ளன. அநேகமாக அவற்றை நீங்கள் கேள்வியுற்றும் இருக்கலாம். மேலும், ஏனைய சகோதரர்களும் பேசவேண்டியதாக இருக்கிறது. ஆகையால், இன்னும் கொஞ்சம் அவர்கள் சரிதைபற்றி கூறி என்னுரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மஹான் அவர்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும், மலபார், மலையாளம், அராபியா, இலங்கை முதலிய பிரதேசங்களுக்கும் சென்றிருக்கிறார்கள். ஹஜ்ஜுக் கடமையை அவர்கள் இனிது நிறைவேற்றி எம்பெருமானார் நாயகம் (ஸல்) அவர்களின் ஸியாரத்திற்காக மதீனா நகர் வந்து ரவுளாஷரீபின்முன்பு கைகட்டி மரியாதையோடு ஸியாரத்து செய்கிறார்கள். ஆஷிகேரஸூலாகிய அவர்களுக்கு எம்பெருமானாரின் அன்பு அகத்தில் பொங்கி அலை மோதுகிறது. பேரின்ப வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. பக்தி பரவசம் ததும்பிவழிய நாயகம் (ஸல்) அவர்களின்மீது புகழ் மாலையாக *'அல்ஹம்துல்லாஹல் வலீ'* என்ற (பைத்து) கவிகளை பாடுகிறார்கள். (யா கைரந்நபீ) நபிகளில் சிரேஷ்டரே என்று அழைத்து, அழைத்து தங்களது உள்ளக் குமுறல்களை அங்கு சமர்ப்பிக்கிறார்கள். அன்பும், இன்பமுங் கொண்டு பாடிய அக்கவிகளில் இறுதிப் பகுதியான (லயஸீதுல் ஹாப்பு......) தங்களின் தரிசனம் பெறவேண்டும் என்ற பேராவல் என்னுள்ளே பொங்கிக் கொண்டே இருக்கிறது. எனவே, நபி நாயகம் அவர்களே! தங்களின் திரு முகத்தை இத்தமியேனுக்குக் காண்பித்தருளி நற்கருணை புரியுங்கள். (நக்கி கல்பீ ......) தீய ஒழுக்கம், ஹக்குத்தஆலாவல்லாத வேறு சிந்தனை எதுவும் என்னிதயத்தில் குடிபுகச்செய்யாமல் எனது கல்பைப் பரிசுத்தப்படுத்துங்கள்! நந்நபியே! தங்களின் திருமுகத்தை இச்சிறியேனின் முகத்தில் வைத்து முத்தி முகந்து என்னை தன்னியனாக்குங்கள் என்ற முறையீட்டை உருக்கமுடன் பிரலாபித்து ஓதுகிறார்கள். அப்போது எம்பெருமானார் நாயகம் (ஸல்) அவர்கள் பிரசன்னமாகி தங்களது சந்திரவதனத் திருமுகத்தை தைக்கா ஸாஹிபு வொலியவர்களின் திருமுகத்தின் மீது வைத்து முத்தி முகத்தார்களாம். ஸல்லல்லாஹு அலா முஹம்மத் - ஸல்லல்லாஹு



அலைஹிவஸல்லம். இச்சம்பவத்தை ஞாபகமூட்டும் வண்ணமாக, இந்த அல்ஹம்துல்லாஹல் வலீ பைத்துகளை மஜ்லிசுகளில் ஓதப்படும்போது யாவரும் எழுந்து நின்று கை கட்டி மரியாதையுடனேயே ஓதி வருகிறார்கள்.

தைக்கா ஸாஹிபு நாயகம் அவர்களது புத்திர ரத்தினம்தான் முஹம்மது ஸாலிஹ் வொலியுல்லாஹ். அவர்களுக்கு பெண் மக்களும் இருந்தார்கள். மஹான் அவர்கள் அவதரித்ததும் ஸபர் மாதமே. ஆகிரத்தளவில் ஸபர் சென்றதும் ஸபர் மாதமே. ஹிஜ்ரி 1272 ஸபர் பிறை 14 வெள்ளிக்கிழமை காலை அவர்கள் இவ்வுலகைவிட்டு ஆகிரத்தளவில் சென்றார்கள். இன்னாலில்லாஹி ......

தைக்கா ஸாஹிபு நாயகம் அவர்கள் கிலாபத்து பெற்றிருந்ததும், தங்கள் கலீபாக்களுக்கு கிலாபத்து கொடுத்ததும் காதிரிய்யாத் தரீக்காவாகும். அவர்களது முன்னோரும் பின்னோரும் சக்தி நிறைந்த அந்தத் தரீக்கிலேயே பாக்கியம் பெற்றனர். ''அந்த (பக்தாது) அப்துல்காதிர் நாயகமுடைய பாத மிதிதானே இந்த அப்துல்காதிரை (பேரானந்தப் பெருமித) குதிபோடச் செய்கிறது'' என்று பெருமகிழ்வோடு அடிக்கடி அவர்கள் சொல்லிக் கொள்வதுண்டாம். மேலே பிரஸ்தாபித்த அல்ஹம்துல்லாஹல்வலீ பைத்தின் இறுதியிலுள்ள கீழ்கண்ட துஆ இறைஞ்சலுடன் என்னுரையை முடித்துக் கொள்கிறேன். (ஹாதியன் இலத்தரீகில் காதிரிய்யில் ......) ''நந்நபியே! சிறந்ததெனத் தெரிவு செய்யப்பட்ட காதிரிய்யாத் தரீக்காவிலேயே (ஹிதாயத்து) நேர்வழிப்பிரகாசம் பெற்றவனாக என்னை தன்னியனாக்குங்கள்.'' ஆமீன்.

இவ்வருமையான சந்தர்ப்பத்தை அமைத்துத் தந்து நான் கூறியவற்றை பொறுமையுடன் சிறப்பாகக் கேட்டு என்னை கௌரவப்படுத்திய நண்பர்களே, சகோதரர்களே! உங்களனைவருக்கும் எனது மனம், மெய், மொழிகளாலான நன்றியுணர்ச்சியை தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து நண்பர் முஹம்மது நூஹ் அவர்களை பேசும்படி வேண்டிக்கொள்கிறேன். வஸ்ஸலாம்.

முஹம்மது நூஹ்:— பேரன்பு படைத்த சகோதரர்களே! சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல நண்பர் பதுரு அவர்களின் ஹிதோபதேசப் பிரசங்கத்தை இது காறும் ரசித்தோம், ருசித்தோம். நண்பர் அவர்கள் தைக்கா ஸாஹிபு நாயகம் பற்றி சொன்னார்கள். நான், அவர்களது அருமைத் தந்தை உமர்வலியுல்லாஹ் பற்றி சொல்ல விரும்புகிறேன். தனயனின் தகைமைபற்றி இறுகாறும் சொல்லக் கேள்வியுற்றேம். தந்தையின் தகைமை பற்றி சொல்லவா வேண்டும்? (அல்வலது ஸிர்ருல் வாலித்) "பிள்ளை, தந்தையின் இரகசியம் (ஸிர்ரு)" என்பது நாயக வாக்கியமாகும். மகான் உமர்வலி அவர்களைப்பற்றி அவர்களது கலீபா ஷெய்கு முஸ்தபா வலியுல்லாஹ் பாடிய மெஞ்ஞானத் துதியிலிருந்து ஓர் சில பாடல்களை எடுத்துச் சொல்லி பிறகு அவர்களது ஜீவிய சரிதையை கூறுகிறேன். அப்பாடல்களாவன:—

என்னை எனக்கறிய என்னறிவுக் கெட்டாமல்
உன்னை நான்மிக மறந்து வுடலெடுத்துப் பாவியானேன்
முன்னே நான் செய்தவெல்லாம முழு மூடத்தனமாகும்
பின்னே நினைவு வந்து பிரிடத்திலோடி வந்தேன்.

வந்து நான் கைபிடித்து வாசம்பெற மஅரிபத்தில்
சொந்தமாய்க் கலிமாவில் சொல்லித்தந்த திக்றுகொண்டு
சிந்தை தெளிந்து வருஞ் சிறப்பாய் ஷஹூதது தரும்
நந்தி கிருபை செயும் நந்தி பாதமுள்ளில் வைத்தேன்.

நண்பர்களே! நந்தி என்று இங்கு குறிப்பிடுவது தங்களது சற்குரு மஹான் உமர் அவர்களையே. மேலும் அப்பாடல்கள்:-

உள்ளந் தனிற் கருப்பை ஒதுக்குவித்து நாடோறும்
கள்ள மனத்திலுள்ள கவலையெல்லாந் தீர்த்து வெளினில்
உள்ளபடி நடக்குமொரு உட்பொருளைக் காட்டுவித்தோர்
வள்ளலே முர்ஷிதெங்கள் வரிசை உமறென் ஷெய்கே.

ஆதிமுதலாகி நின்ற அஹதியத்தின் பொருளை
நீதமுடனெங்களுக்கு நிச்சயமாயெடுத்துரைத்தோய்
காதலுடனுங்கள் பதங் கல்புதனில் நின்றிலங்க
ஆதரவு செய்யுமெங்கள் ஆரிபுமறென் ஷெய்கே.



பரக்கத்திற்காக இப்பாடல்கள் சில சொன்னேம். இப் பாடல்கள் பாடிய அந்தக் கலீபா அவர்கள் இலங்கையிலுள்ள வேருவிலையிலுள்ளவர்கள். இனி மஹான் அவர்களின் சரிதையை நோக்குவோம்.

மஹான் உமர்வலியவர்கள் நமதூர் காயல்பட்டணத்தில் ஹிஜ்ரி 1162-ல், ஜனனமானார்கள். அருமைத் தந்தையின் பெயர் அப்துல்காதிர், பாட்டனாரின் பெயர் மஹ்மூது. உமர் வலியவர்கள் சிறுபிராய முதலே சன்மார்க்கக்கலைகளில் தலை சிறந்து விளங்கினார்கள். இறைவணக்க இன்பத்தில் இளம் பிராயத்திலேயே திளைக்கலானார்கள். சதாவும் குர்ஆனை ஓதிக் கொண்டிருப்பார்கள். ஆத்மஞானகுரு (ஷைகு) உடைய தொடர்பின் மாண்பு பற்றியும், அவசியம் பற்றியும் நண்பர் பதுரு அவர்கள் வெகு சவிஸ்தாரமாகச் சொன்னது ஞாபகமிருக்கும். உமர்வலியவர்கள் அத்தகைய குரு நாதர்களாக பாலப்பா என்ற சிறப்புப் பெயருள்ள ஷெய்கு முஹம்மது நுஸ்கிய்யி அவர்களையும், ஸெய்யிது ஷெய்கு ஜிபுரிய்யில் ஹள்ரமிய்யி அவர்களையும், மதீனா நகர்வாசியான ஸெய்யிது முஹ்ஸின் முகைபிலி அவர்களையும் ஏற்று பைஅத்துப் பெற்றிருந்தார்கள். இம்மதீனப் பெரியாரின் விருப்பத்திற் கிணங்க மதீனஷரீபில் இவர்களின் ஸ்தானத்தில் அரபி மத்ரஸா உஸ்தாதாக இருந்து உமர்வலியவர்கள் ஐந்தாண்டு காலமாக (இல்மு) கல்வி போதித்து வந்தார்கள்.

கபீர்:— என்ன ஆச்சரியம்! இந்தியர் (அஜமி) ஒருவர், அரேபியாவில், அதுவும் மதீனாவில் அரபியாசிரியராயிருந்து போதித்தார்களா?

மு. நூஹ்:— ஆம்! ஆச்சரியமேதுமில்லை. அவர்களின் முப்பாட்டனார் ஸதக்கத்துல்லாஹ்வலியவர்கள் அரபியில் பாண்டித்தியம் பெற்று அரேபியா தேசமெல்லாம் புகழ் பெற்றிருந்தது போல இவர்களுமிருந்தார்கள். இக்காயல்மா நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் தீனுல் இஸ்லாமின் ஞானச்சுடர் வீசி ஒவ்வொருவரும் அரபியில் பாஷா விற்பன்னமும், சன்மார்க்க ஞானமும், சம்பூர்ணத் தன்மையும் பெற்றிருந்தமையால்

தானே 'கிறு மக்காம்' என்ற சிறப்புப் பெயருக்கு உரித்தாயிற்று. முன்னர் குறிப்பிட்ட முப்பெரும் ஞானகுரு மகான்களின் தொடர்போடு, அவர்களது ஞானத்தகை மற்றொரு மஹானையும் நாடிற்று. ஆண்டவனது நாட்டப்படி சிலருக்கு ஒரேஷைகு மூலமே ஞான சம்பூரணத்தன்மை உண்டாகும். மற்றும் சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஷைகுகளிடம் சம்பூரணத் தன்மை ஏற்படும். இவ்வண்ணமாக, மஹான் ஸெய்யிது முஹம்மது புகாரித்தங்கள் அவர்களிடம் உமர்வலி கொச்சிக்குச் சென்று பைஅத்துப் பெற்றார்கள். தொழுகையில் நின்றுக் கொண்டிருந்தபோது திடீரென்று அழைப்பு வந்து மிஹ்ராபு பிளந்து அதன் வழியே உடனே அங்கு போய்ச் சேர்ந்தார்கள் என்ற சேதியும் மவுலிதுக் கிரந்தத்தில் சொல்லப்படுகிறது. புகாரித்தங்கள் அவர்கள் தமதுசீடர் உமரை நெஞ்சோடணைத்து முத்தி முகந்து பைஅத்து கொடுத்து கிர்க்கா என்னும் ஆடை புனைந்து (அல்யவ்ம அக்மல்த்துலகும் தீனகும்) "இன்றைய தினத்திலே உங்களுக்கு உங்களுடைய (தீனை) சன்மார்க்கத்தை சம்பூரணமாக்கித் தந்தோம்" என்ற திருமறை வசனத்தை ஓதினார்கள். உமர்வலியவர்களுக்கு அன்றே சம்பூரணமாயிற்று. குருபிரானின் பற்றில் ஆழ்ந்துபோன அவர்கள், 'நான் எதிர் பார்த்தற்கும் அதிகமாக அல்லாஹ்விடம் பெரும் பாக்கியங்களைப் பெற்றேன். அதற்குக் காரணம் மூன்று. (1) அல்லாஹ்வின் நல்லடியார் எவரையும் நான் பகைக்கவில்லை, (2) ஸெய்யிது மார்களையும், ஷெய்குமார்களையும், உலமாக்களையும் றெம்பவும் மரியாதை பண்ணினேன். (3) எனது ஷைகு அவர்களின் சொல்லை இமைப் பொழுதுகூட நான்மறக்கவேயில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். தமது குருநாதர் ( ஷைகு ) பற்றி அவர்கள் புகழ்ந்து பாடியிருப்பதை அவர்களது மெஞ்ஞான இன்னிசை என்ற நூலிலிருந்து எடுத்துச் சொல்லுகிறேன்.

"எப்பொழுதுமே யும்மை யேத்தி யிறைஞ்சும் அடியான்
தப்புகளெல்லாந் தவிர்த்து தான் காக்க வேணுமையா
முப்பொருளாய் முச்சுடராய் முத்தினு முத்தின் னொளிவாய்
ஒப்புரவாய் நிரம்புமெங்க ளுஸ்தாது வென்பீரே.



செய்யாமற் செய் நன்றிக்குச் சேரும் பகரஞ் செய்ய
வையகமும் வானகமு மாற்றலரி தென்றதனால்
ஐயனும் பிதாவுமடியேன் றன்னுடலுயிரும்
செய்யிது முஹம்மதுக்கு சேருங் குருபரனே."

நண்ப சிகாமணிகளே! பார்த்தீர்களா அவர்களின் குரு பக்தியின் மேன்மையை! தன்னையும் தனது தந்தையையும், தனது உடலையும், உயிரையும் தனது ஷெய்கான ஸெய்யிது முஹம்மது புகாரி அவர்களுக்கு தத்தஞ் செய்கிறார்கள். இது வன்றோ குருபக்தி! மகான் அவர்கள் தங்களின் மற்றொரு பாடலில் சொல்கிறார்கள்.

நாட்டந்தருமின்ஸான் காமில் முகம்மிலாம்
நந்தியாம் ஸெய்யிது முஹம்மது புகாரியைத்
தேட்டமாயெப்போதும் புந்தியில் நாட்டியே
சிந்தை செய்தவுடன் வந்தருள் செய்குவார்.

*அப்பாஸ் :—* உமர் ஒலி அப்பா அவர்கள் அரபியில் தானே பெரும் பாண்டித்தியம் பெற்றிருந்ததாகச் சொன்னீர்கள். தமிழ் பாடல்களும் அவர்கள் சொன்னதா?

*மு. நாஸ்ர் :—* ஆம், தமிழ் பாடல்களும் அவர்கள் சொன்னதே. இதுமட்டுமல்லாமல் வேறு பல அரிய பாடல்களும் சொல்லி இருக்கிறார்கள். நான் இப்போது சொன்ன பாடல், அவர்களின் பிரசித்திபெற்ற 'கல்பைக் கழுகினாலே கரை சேரலாம்' என்ற பாடலின் கடைசி சரணம்.

*மக்கீ, அலாவுதீன் :—* அந்தப் பாடலை தயவுசெய்து முதலிலிருந்து படியுங்களேன்!

*மு. நாஸ்ர் :—* எனக்குச் சில பாடல்கள்தான் பாடம். முடிந்தமட்டிலே சொல்ல முற்படுகிறேன். (பாடுகிறார்).

*பல்லவி*

கல்பைக் கழுகினாலே கரை சேரலாம்
கையைக் கழுகினதால் கறை போமோ. (கல்)

[ நண்பர்களும் தொடர்ந்து பாடுகிறார்கள். ]

பார்த்தீர்களா, அம்மகானுபாவர் குறிப்பிடும் தத்துவப் போதனையை! வெறுமனே வெளிரங்கச் செயல்களை மாத்திரம் புரிந்து கொண்டே இருந்து, கல்பை கெட்ட குணங்கள், துனியா ஆசை என்ற திரைகளிலிருந்து பரிசுத்தப்படுத்தாமல் இருந்தால் எப்படி என்று கேட்கிறார்கள்? கையைக் கழுவினதால் மட்டும் இருதயக் கறள் போய்விடுமா? அதற்கு கல்பையல்லவோ கழுகவேண்டும் என்று சொல்வது சரிதானே!

அனுபல்லவி

கல்பதிலேயொரு நாளைக் கறுபது
ஹக்கன்றிரு நோக்குண்டாகுமென்றார் நபி (கல்)

சரணம்

அல்லா(ஹ்)வடிமை தன் ஸிரத்தளவிலு
மவன்தன் முதலையு மமலையும் பாரான்
எல்லாப் பொழுதிலுங் கல்பைப் பார்ப்பானென்று
ஏகன் நபியோதின தறியாயோ (கல்)

மல்லான போரும் கிபுரும் ஹஸதையும்
மாற்றானுண்டாக்கு மொஸ்வாஸடங்கலும்
இல்லாமலாக்கியே யேகன் கிருபையா
லெப்போதுந் தௌஹீதால் துப்புரவாகவே (கல்)

பொல்லாப் பொறியும் புலனுங் கரணமும்
போக்கி ஜமாலை ஷுஹூது செய்யாதவர்
எல்லாக் கிதாபு மெழுத்தற வோதினு
மெரி நரகிற்சென்று வீழ்வாரது நிசம் (கல்)

பொய்யுங் களவும் பொருந்தி யிருக்கிற
புந்தியை நந்தி பொருட்டதினாலே
மெய்யாய் விளக்கியே வேதப் பொருளதை
விஸ்தாரமாகவே வுஸ்தாது கிருபையால் (கல்)



இருளிலிருந்த பொருளை வெளியாக்க
எண்ணெயுந்திரியு மெரியும் விளக்குமாய்
குருதரும் பொருளு முடலு முயிருங்
கூட்டியே மூச்சுடன் நாட்டியே தீபத்தால் (கல்)

நாட்டந் தருமின்ஸான் காமில் முகம்மிலாம்
நந்தியாம் செய்யித் முஹம்மது புகாரியைத்
தேட்டமா யெப்போதும் புந்தியில் நாட்டியே
சிந்தை செய்தவுடன் வந்தருள் செய்குவார். (கல்)

நண்பர்களே! இப்பாடல்களின் வசனங்கள் எவ்வளவு தெளிவாக உள்ளன. ஆனால், கருத்துக்கள் எவ்வளவு ஆழமாக உள்ளன, பார்த்தீர்களா?

*அலாவுதீன்* :— உமர்வொலி நாயகம் அவர்கள் பாடிய சில பாடல்கள் எந்நாளோ, எந்நாளோ என்று முடிவு பெறுமல்லவா?

*மு. நாஸ்* :— ஆம்! அது 'எல்லாருங் கூடியிருக்குங் களரியிலே' என்று ஆரம்பமாகும் பாடல்களாகும். அதுவும் அவர்கள் சொன்னதே! மஹான் அவர்களின் சரித்திர சம்பந்தமான விஷயங்களைச் சொல்லி முடித்த பின்பு நாம் யாவரும் சேர்ந்து அந்தப் பேரின்பப் பாடலை படிப்போமே! சரி. உமர் வலியுல்லாஹ் அவர்கள் தங்கள் குருநாதரின் மீது அளவற்ற விசுவாசம் பூணடிருந்தார்கள் என்பதைக் கண்டோம். குருநாதர் அவர்களின் உத்தரவுப்படி அந்த வுடனேயே ஸாலிஹ் மலைக்கு கால்நடையாக கடுஞ்சிரமமும், கஷ்டமும் மேற்கொண்டு நடந்து சென்றார்கள். வழியில் எவ்வளவோ இடையூறுகளும், முட்டுக்கட்டைகளும் நேர்ந்துங்கூட அவர்கள் நிலை குலைந்தார்களில்லை. இறுதியில் தங்களது தனிப்பெரும் முயற்சியில் தகைமை வெற்றிகண்டார்கள். ஸாலிஹ் மலையில், தமது குருநாதர் அருளியபிரகாரம் இரு மஹான்களின் தரிசனம் பெற்று திரும்பினார்கள். அவர்களுக்கு அப்பிரயாணத்தில் பல அற்புதச் சம்பவங்கள் நிகழ்ந்தன. முரட்டுத்தனமுள்ள காட்டு யானைகள், புலி கரடிகள் எல்லாம் அவர்களுக்கு அடிபணிந்தன. நீரிடையே வாழும் மச்சங்களும் மஹான்அவர்களுக்கு தொண்டு

புரிந்தன. ஏன் நடைபெருது இச்சம்பவங்கள்! எம்பெருமானுர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம அவர்கள், "நீ அல்லாஹ்வுக்கு அஞ்சி பக்தியுடன் வாழ்வாயாளுல் எல்லா ஜீவராசிகளும் உனக்கு அஞ்சி வழிபடும். ஆனுல், நீ அல்லாஹ்வுக்கு பயப்படாமல் ஜனங்களுக்குப் பயப்படுவாயாளுல் எல்லா வஸ்துக்களையும் கண்டு நீ அஞ்சி நடுங்குவாய்! உனக்கு ஒன்றும் வழிபடாது" என்ற கருத்தில் எம்பெருமானுர் (ஸல்) அவர்களுடைய அமுத மொழிகள் பல உள்ளன. இதே போன்ற ஓர் சம்பவம் மற்ருென்று ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது: பாசிப் பட்டணம் நெயினு முகம்மது ஸாஹிபு வலியுல்லாஹ் அவர்களின் பிதா கோட்டைப்பட்டணம் ஷைகுமுஹம்மது ஷாஹ் என்ற ராவுத்தர் சாஹிபு வலியுல்லாஹ் அவர்கள் காலத்தில் அம்மஹான் அவர்களை பரீட்சிக்கும் நோக்குடன் வெளி ரங்கக் கல்விகளை மாத்திரம் ஓதிப் படித்த இரண்டொரு ஆலிம்கள் சென்ருர்களாம். சந்தித்ததற்கப்பால் இவர்கள் அம்மஹானைப் பற்றி மனதில் குறைவாக மதித்து அலட்சிய எண்ணங் கொண்டார்களாம். அன்று விடியற்காலம் இந்த ஆலிம்கள் அவ்வூர் குளத்தில் குளிக்கப்போய் குளித்துவிட்டு வேட்டி உடுப்புகளை மாற்றலாமென்று கரைக்கு வர முனைந்தபோது வாயைப் பிளந்தபடி புலியொன்று கரையில் நிற்கிறது, எக்கரை திரும்பிளுலும் அங்கு அதுவும் வர ஆரம்பிக்கிறது. பயந்து திணறித் தவித்து வகையறியாது குளத்திற்குள்ளேயே அவர்கள் நின்று தவிக்கிருர்கள். புலியின் வாயில் சிக்கினுமே என்ற நடுக்கம் ஒருபக்கம். பலமணி நேரம் விடியற்கால வேளையில் குளிர்ந்த தண்ணீரிலேயே கிடந்துகொண்டிருப்பதனல் குளிர் நடுக்கம் மறுபக்கம். அத்தருணம், மஹான் ராவுத்தர் சாஹிபு வலியுல்லாஹ் அவர்கள் அங்கு வருகிருர்கள். உடனே, எந்தப் புலியைக் கண்டு இவர்கள் தொடை, நடுங்கிளுர்களோ அந்தப்புலி அம்மஹான் அவர்களுடைய பாதத்தில் மண்டியிட்டு அடிபணிந்தது. அம்மஹான் அவர்கள் புலியை நோக்கி, 'இவர்கள் நம் விருந்தாளிகள்! ஆகையால், இவர்களை பயமுறுத்தாதே! நீ உன்னிடத்திற்குப் போய்விடு' என்று சொன்னதுதான் தாமதம், அப்புலி உடனே காட்டின்



பக்கம் சென்றுவிட்டது. அந்த ஆலிம் சாஹிபுகள் தங்களின் தவருன எண்ணத்திற்காக வருந்தி மஹான் அவர்களிடம் மன்னிப்புக் கோரினர். அம்மஹான் அவர்களைப்பற்றி தாங்கள் அலட்சிய மனேபாவம் பூண்ட தோஷத்தின் விளைவே இந்தப் புலி விஜயப் படலம் என்பதையுமுணர்ந்து சமாதானங் கோரினர். அவர்களை மன்னித்து அம்மஹான் அவர்கள் சொன்ஞர்களாம், "நீங்கள் குர்ஆனின் எழுத்தை மாத்திரம் பார்த்துக் கொண்டீர்களே தவிர, அதன் கருத்தை உணர்ந்தீர்களில்லை. ஆளுல், நாங்களோ அதன் கருத்திலேயே உருகி ஊறித்திளைத்தவர்களாக உள்ளோம். குர்ஆனின் கருத்தைக் கண்டவர்களுக்கு புலியும், மற்றும் சர்வ ஜீவராசிகளும் அஞ்சி வழிபடுகின்றன. ஆனுல், கருத்தையுணராமல் எழுத்தை மாத்திரம் கண்டவர்களோ புலியையும், அற்ப வஸ்துக்களையும் கண்டு நடுங்குகிருர்கள்' என்று சொன்ஞர்களாம்.

நண்பர்களே, பார்த்தீர்களா? அவுலியாக்களுக்கு அல்லாஹுத்தஆலா அளித்திருக்கும் அதியற்புத ஆற்றல்களையும் ஆத்மீக வலிமைகளையும்!

*முஹம்மது மக்கீ:-* இந்த ராவுத்தர் சாகிபு வலியுல்லாஹ் அவர்கள் நமதூருக்கு வந்திருக்கிருர்களா?

*மு. நூஹ்:—* வந்திருக்கிருர்கள். சரித்திர பூர்வமான தொடர்புடன் அவர்கள் நமதூர் விஜயஞ் செய்திருக்கிருர்கள். நமது உமர் வலியுல்லாஹ் நாயகம் அவர்களின் முப்பாட்டஞரான ஸதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களின் தந்தை மஹான் சுலைமான் வலியுல்லாஹ் நாயகம் அவர்களுக்கும், இந்த மஹான் ஷைகுமுஹம்மது ஷாஹ் என்ற ராவுத்தர் சாஹிபு வலியுல்லாஹ் அவர்களுக்கும், திருமங்கலக்குடி மவுலாஞ முஹம்மது அபூபக்கர் அவர்களுக்கும் நமதூர் [illegible] ஜும்ஆ மஸ்ஜிதில்; பக்தாதிலிருந்[illegible] பெரியார் அஷ்ஷைகு அஹ்மது ஜலாலுத்தீன் ர[illegible]மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மூலம் காதிரிய்யாத் [illegible]காவில் பைஅத்து— இஜர்ஸத்து பாக்கியம் அருளப்பட்ட[illegible] அல்லாஹு அக்பர். இத்தகைய அகமியங்கொண்ட புனி[illegible] நகரம் நமதூர் என்பது

O7wx
N76
113628

பற்றி நாம் பெருமையடைய வேண்டும். பெருமையடைந்தால் மட்டும் போதுமா? அத்தகைய பெருமையைக் காப்பாற்றி நாமும் அதற்கு தகுதியுள்ளவர்களாக நடக்க வேண்டும். அல்லாஹ் அவ்வாறே நமக்கும் நம் சந்ததியினருக்கும் நல்லருள் பாலிப்பானாக. ஆமீன்!

நண்பர்களே! உமர்வலியவர்களை உகந்து அண்டியவர்களெல்லாம் உத்தமர்களாயினர்; அவர்களின் முரீதீன்களான சிஷ்யகோடிகள் பலர் அவுலியாக்களாயினர். அவர்களது அருமை மகனார் அல்ஆரிபு ஸெய்யிது முஹம்மது அவர்களுக்கு "இலாஹீகம் துபக்கீனீ" என்ற கஸீதாவைப்பற்றி, தங்களது வபாத்திற்குப் பதினாலு ஆண்டுகள் கழித்து, அறிவித்துச் சொன்னார்கள். "சர்வகாலமும் நேமமாக அந்த பைத்தை ஓதி வருமாறும், அதன்மூலம் இம்மை, மறுமையின் சுபீட்சம் பெற முடியும்" எனவும் கூறினார்களாம். இவ்விபரங்கள் 'தல்அதுல் கமர்பீ மவ்லிதிஷ்ஷெய்கு உமர்' என்ற கிரந்தத்தில் சொல்லப் பட்டுள்ளன.

பிரஸ்தாப 'இலாஹீகம்துபக்கீனீ' என்ற கஸீதா இன் றளவும் மரியாதையுடனும், உருக்கமுடனும் மஜ்லிசுகளில் ஓதப்பட்டு வருகின்றது. அதை ஓதும்போது எத்தகைய பேரின்ப உணர்ச்சி பொங்குகிறது! அதன் ஆழ்ந்த தத்துவங்களில் ஆழ்ந்து விடும்போது உண்டாகும் பேரானந்தப் பரவசந்தானென்னே! அரபியில் மற்றொரு ஞானப்பாவும் அவர்கள் உரைத்துள்ளார்கள். அதுதான் 'அல்லபல்அலிபு' என்ற மெஞ்ஞானத் தத்துவப்பாவாகும். அதில் அரபிப் பாஷையின் இன்ப நயமும், இலக்கியச் சுவையும், பேரின்ப ரசமும், ஞானச் சுனையும் பொங்கி வழிகின்றன. அதற்கு பெரிய மஹானுபாவர்களெல்லாம் விரிவுரைகள் தீட்டியுள்ளார்கள். கைர். சரிதையைச் சொல்லி முடிப்போம்.

மஹான் உமர்வலியவர்கள் தங்களின் 53-வது வயதில் ஹிஜ்ரி 1216, துல்கஃதா பிறை 14 வெள்ளிக்கிழமை மாலை அல்லாஹ்வின் திருவடி நிழல் சேர்ந்தார்கள். இன்னாலில்லாஹி ............ தைக்காவினுட் பக்கம் அவர்களின் புனிதச் சடலம்



நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர்களது திருக் குமாரர் தைக்கா ஸாஹிபு நாயகம் அவர்களின் புனிதச் சடலமும் அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. அல்லாஹுத்த ஆலா அப்பூபதிகள் பிறந்து வளர்ந்து மறைந்துள்ள இப் பதியை ஜோதிபெறச் செய்வானாக. அவர்களின் புகழ்பாடும், ஞாபகம் செய்யும் நேசர் குழாங்களின் இதயங்களை அவர்களின் பொருட்டால் இறைவன் ஞானவிகாசமுறச் செய்வானாக. ஆமீன்.

எனதருமைச் சகோதரர்களே! இதுகாறும் அமைதியுடன் இத்தமியேனுடைய மழலைச் சொற்களை — ஆம், நான் அறிவில் மழலையேதான் — கேட்டுக்கொண்டிருந்தமைக்காக எனது அகங்குளிர் நன்றியை உங்கள் யாவருக்கும் சமர்ப்பித்துக் கொண்டு, இதோ எனக்கடுத்திருக்கும் ஜனாப் யாஸீன் அவர்களைப் பேசுமாறு வேண்டிக்கொள்கிறேன். வஸ்ஸலாம்.

பதுரு :— மர்ஹபா! மர்ஹபா!!

*யாஸீன் :—* உத்தம நண்பர்களே! அறிவு தகைமைசால் அன்பர்களே! அறிவீனனாகிய நான் உங்கள் மத்தியில் என்ன தான் விசேஷமாக எடுத்துரைக்கப் போகிறேனோ? தெரிய வில்லை. முஹம்மதுஸாலிஹ் வலியுல்லாஹ் அவர்களைப் பற்றிய சில சேதிகள் பெரியோர்கள் மூலம் கேள்விப்பட்டிருக்கிறேன். அதைச் சொல்வதற்கும் தைரியம் வரமாட்டேனென்கிறதே......

*அ. ஸலாம் :—* பீடிகை றெம்பதூரம் போகிறதே, கூட்டாளி! உங்களைத் தெரியும் ஜனாப் யாஸின் சாஹிப்! சும்மா சொல்லுங்கள்! தைரியசாலிக்கு ஏது பயம்?

*யாஸீன் :—* அறிவாளிகள் மத்தியிலே பேசுவதற்கு அச்சமாகத்தானிருக்கிறது. அல்லாஹ்வின் பேரில் (தவக்குல்) நம்பிக்கை வைத்து ஆரம்பம் செய்கிறேன். (அவூது பிஸ்மியுடன் இன்னல்லாஹ வமலாயிக்கத்தஹு யுஸல்லூன...... என்ற குர்ஆன் வசனத்தை ஓதுகிறார்.) நண்பர்களே! நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது அமரர்களும் நபி நாதர்மீது ஸலவாத்துச் சொல்கிறார்கள். விசுவாசிகளே! நீங்களும் அந்த

நபிநாதர்மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்வீர்களாக என்று இவ்வசனத்தில் இறைவன் உத்திரவிடுகிறானே, அந்த நபி நாதருடைய நிலைமை சாமானியமானதாக இருக்க முடியுமா? அவர்கள் மீது மும்முறை ஸலவாத் உரைப்போமாக. (அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம்-என்று மும்முறை ஓதுகிறார்கள்)

(லவ்லாக்க லமா கலக்துல் அப்லாக்க) 'முஹம்மதே! நீவிர் இல்லை எனில் இந்த உலகத்தில் ஒன்றையும் நான் படைக்கப் போவதில்லை' என்று ஹக்குத்தஆலா அவர்களை நோக்கிக் கூறியுள்ளான்.

பெருமானார் யார்? ஆதி ஜோதி. 'அல்லாஹ் படைத்த முதல் படைப்பு எனது (நூர்) ஜோதி' எனவும், 'நான் அல்லாஹ்வுடைய ஜோதியிலிருந்தானவன்; சர்வ வஸ்துக்களும் எனது ஜோதியிலிருந்து ஆனவை' எனவும் எம்பெருமானார் (ஸல்) உரைத்துள்ளார்களல்லவா? ஆகவே, அந்த நூரு முஹம்மதிய்யா-ஹக்கீகத்து முஹம்மதிய்யா தரிசன பாக்கியம் பெற்றவர்களுக்கே சுப சோபனம். பெருமானார் அவர்களின் ஆத்மீக ஜோதியில் ஞானப் பந்தத்தைக் கொழுத்தி மன வெளிச்சப் பிரகாசம் பெற்ற மகானுபாவர்களே அல்லாஹ்வின் அவுலியாக்கள். அவர்களுள் ஒருவரான மஹான் முஹம்மது ஸாலிஹ் வலியவர்கள் ஆரிபேறப்பானீயாகவும், ஆஷிகே ரஸூலாகவும், முஹிப்பே முஹிய்யத்தீனாகவும் இருந்தார்கள். அருமை தைக்கா ஸாஹிபு நாயகம் அவர்களின் அருமைப் புத்திரராக இவர்கள் காயல் நகரிலே ஹிஜ்ரி 1242-ல். அவதரித்தார்கள். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கொப்ப இவர்கள் தமது உத்தம பிதாவின் கண் காணிப்பில் சிறு பிராயத்திலேயே சன்மார்க்க சீலத்திலும், சற்குண நற்குணப் பண்புகளிலும் உயர்ந்து விளங்கினார்கள். தந்தையவர்களிடமே இல்மு, ஞானக்கல்விகளைப் பெற்று அவர்களிடமே பைஅத்தும், கிலாபத்தும் பெற்று விலாயத்துடைய (மகாமை) பதவியை எய்தினார்கள். ஏராளமான சிஷ்யகோடி (முரீது)களுக்கு (முர்ஷிது) வழிகாட்டியாகவும் விளங்கினார்கள். இவர்களின்



ஜனனம் பற்றி இவர்களது தந்தையிடம் முற்கூட்டியே மக்கமா நகரில் வதிந்த முஹம்மது ஸாலிஹ் என்ற பெரியார் நன்மாராயங்கூறி, அப்பிள்ளைக்கு தமது பெயரையே சூட்டும்படியும் சொல்லியிருந்தார்களாம். அதன்படியேஇவர்களுக்கு முஹம்மது ஸாலிஹ் என்ற பெயரிடப்பட்டது. ஸாலிஹ் என்றால் சாதுவானவர்—நல்லவர் என்று அர்த்தம் பெயருக்கேற்பவே சற்குணவானாயிருந்தார்கள். வாது சூது அறியாத, பால் போன்ற உள்ளத்துடையவராயிருந்தார்கள். சிறியார், பெரியார் யாவருடனும் மரியாதையாகவே பழகுவார்கள். இவர்களும் பல அதிசயக் கராமாத்துக்களைப் புரியும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். அவுலியாக்கள் கராமத்துகள் நிகழ்த்துவது பற்றி ஆச்சரியப் படுவதற்கில்லை. ஹக்குத்தஆலாவின் (குத்ரத்து) வலிமையாலேயே அக் காரியத்தை அவர்கள் நிகழ்த்துகிறார்கள். குர்ஆன்ஷரீபில் சுலைமான் நபி (அலை) அவர்களின் சரிதையைக் குறிப்பிடுமிடத்திலே அவர்களது சபையிலிருந்த நண்பர் ஒருவரின் சமாச்சாரமும் சொல்லப்படுகிறது. பல்கீஸ் அரசியின் சிம்மாசனத்தை கொண்டு வருபவர் யார் என்று கேட்டபோது, கண்மூடி விழிக்கு முன்பேயே நான் கொண்டுவந்து விடுகிறேன் என்று அந் நண்பர் சொல்லி அவ்வாறே செய்தும் முடித்தார். அந்த நண்பர் நபியல்ல. அவரது பெயர் ஆஸிபு இபுனுபர்கயா. இதுபோன்ற நிகழ்ச்சிகள் கராமத்தைச் சார்ந்தவை என்று ரிஸாலத்துல் குஷைரி என்ற கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

ஹஜ்ரத் உமர்பாருக் (றலி) காலத்தில் நடந்த ஓர் அற்புதத்தை கேள்வியுற்றிருப்பீர்கள். அவர்கள் மதீனாவில் குத்பா ஓதிக் கொண்டிருக்கிறார்கள். ஜனங்களும் கூடி குத்பாவை காது தாழ்த்திக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், குத்பாவின் மத்தியிலே '(யாஸாரியா, அல்ஜபல்)' ஸாரியாவே! மலையைநோக்கிப் பாரும்!' என்று சப்தமிடுகிறார்கள். குத்பா கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு அவ்வார்த்தை புதிராகத் தோன்றிற்று. ஆனால், அவ்வார்த்தையை நிஹாவந்து தேசத்திலிருந்த ஸாரியா என்ற ஸஹாபி தெளிவாகக் கேட்டு மலையை நோக்கிப் பார்க்கிறார். அவர்தலைமையில்

முஸ்லிம் சேனையொன்று அங்கு சென்றிருந்தது. தந்திரமாக பகைவர்கள் மலைப்பக்கம் பதுங்கியிருந்து இவர்களை தாக்குவதற்காகச் செய்த சூழ்ச்சியை அப்போது அந்த ஸஹாபி கண்டுணர்ந்து வேகமாக அவ்வெதிரிகளைத் தாக்கி வெற்றியடைந்தார். மதீனாவுக்கும், நிஹாவந்துக்கும் எவ்வளவோ பெருந்தொலை தூரமாயிருந்தும் நிஹாவந்தில் ஸாரியாவின் சூழ்நிலையை ஹஜ்ரத் உமர் தெளிவாகக் கண்டு எச்சரித்ததும், அவர்களின் சொல்லை ஸாரியா காதில் தெளிவாகக் கேட்டதும் கருமத்துகளைச் சார்ந்ததாகும். மஹான் முஹம்மது சாலிஹ் அவர்களின் அற்புதச் செயல்களில் சிலதாவது சொல்ல ஆசைப்படுகிறேன்.

மலையாளம், மலபார் பகுதிகளில் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்தபோது கள்ளிக்கோட்டைக்கு வருகிறார்கள். அங்கு ஜிபுரித் தங்களின் (மகாமில்) தைக்காவில் ஜனங்கள் கூடி திக்று செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்களும் அதில் சேர்ந்து கொண்டார்கள். மஜ்லிஸு முடிவுற்று கனி வகைகள் நேர்ச்சையாக பகிரப்பட்டன. இம்மஜ்லிசுக்கு புஷ்பமும் பகிர்ந்தால் மணமாக இருக்குமே, இவ்விடம் பூவில்லையா என்று அந்த ஜனங்களிடம் அவர்கள் வினவ 'இக்காலம் இப்பகுதியில் என்ன விலை கொடுத்தாலும் புஷ்பம் கிடைப்பதே இல்லை' என்று ஜனங்கள் பதில் சொன்னார்கள். உடனே முஹம்மதுசாலிஹ் அப்பா அவர்கள் ஜிபுரித்தங்களின் மகாமுக்குள்ளே பிரவேசித்துச் சென்று நறுமணங் கமழும் புஷ்பங்களைக் கையில் எடுத்துக்கொண்டு வெளிவந்து யாவருக்கும் பங்கிட்டார்கள். இப்புஷ்பம் எவ்வாறு கிட்டியது என்று வினவப்பட்டபோது, சங்கை மிகுந்த ஜிபுரித்தங்கள் அவர்கள் தங்களுடைய கபுரிலிருந்து இதைத் தந்தனுப்பினார்கள் என்று சொன்னார்கள். சாதாரண புஷ்பங்களில் காணமுடியாத விசேஷ மணமுடன், கஸ்தூரி வாடையுங் கொண்டதாக அப்புஷ்பங்கள் வாசங்கொண்டிருந்தனவாம்.

மேலும், முஹம்மது ஸாலிஹ் அப்பா அவர்கள் நாகூர் ஷாஹுல்ஹமீது பாதுஷா நாயகம் அவர்களின் நல்லாசியையும்



விசேஷ (ஹதியா) அன்பளிப்பையும் பெற்றார்கள். கண்ணனூரிலிருந்து நாகூர் ஷரீபுக்கு அவர்கள் போவதற்கு முற்கூட்டியே, நாகூர் பாதுஷா (ரஹ்) தங்களது, வம்ச பரம்பரையிலுதித்த பெரியார் ஒருவரின் கனவில் தோன்றி இவர்களது வருகை பற்றியறிவித்து இவர்களுக்கு சங்கை செய்யும்படியும், தன் சார்பில் ஒரு போர்வையை அன்பளிப்பாக கொடுக்கும்படியும், தனது ஸலாமை உரைக்குமாறும் கூறினார்கள். அதன் பிரகாரமே இவர்கள் அங்கு போனதும் அப்பெரியார் கௌரவித்து சங்கை செய்து இவ்விபரங்களையும் அறிவித்தார்கள்.

மேலும், இவர்களுக்கு பூமியைச் சுருக்கிக் கொடுக்கப்பட்டிருந்தது. பல நாள்கணக்கில் பிரயாணம் செய்யக்கூடிய தொலையை ஓர் வினாடியில் கடந்தார்கள். ஏன் இது நடைபெற முடியாது? "வானத்திலுள்ளவற்றையும், பூமியிலுள்ளவற்றையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்தோம்" என்று இறைவன் கூறியுள்ளானே. அவனது உத்தம நல்லடியார்களுக்கு, மெய்ஞ்ஞானிகளுக்கு சர்வத்தையும் வசப்படுத்திக் கொடுத்திருக்கிறானே. மெய்ஞ்ஞானத்தின் தனிப்பெறும் சக்திமுன் விஞ்ஞான சக்தியெல்லாம் எம்மாத்திரம்? அவுலியாக்களின் தவக்கிரீடர், ஜகசத்குரு, கௌதும் அஃலம் நாயகம் அவர்களின் தனிப்பெரும் ஆற்றலை மஹான் சுல்தான் அப்துல்காதிர் ஆரிபுபில்லாஹ் என்ற குணங்குடி மஸ்தான் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

அண்டகோடிகளுமோர் பந்தெனக் கைக்குள்
 ளடக்கி விளையாட வல்லீர்
அகிலமோரேழினையு மாடுங் கறங்கு போ
 லாட்டி விளையாட வல்லீர்
மண்டலத் தண்டரை யழைத்தருகிருத்தியே
 வைத்து விளையாட வல்லீர்
மண்ணகமும் விண்ணகமு மணுவைத் தொளைத்ததின்
 மாட்டி விளையாட வல்லீர்
கண்டித்த கடுகிலெழு கடலைப் புகட்டிக்
 கலக்கி விளையாட வல்லீர்..................

இத்தகைய சக்திகளைப் பெற்றிருந்த முஹிய்யத்தீன் அப்துல்காதிர் (றலி) அவர்களின் சிஷ்யகோடிகளில் ஒருவர் தானே நமது வலியுல்லாஹ்வும். அந்த கௌதுல் அஃலம் அவர்களுடன் ஸில்ஸிலா (ஆத்மீக) தொடர்புள்ள பூபதிதானே நமது வலியுல்லாஹ்வும். ஆகையால், அவர்களிடம் இத்தகைய கராமாத்துக் காரியங்களெல்லாம் வெளியானதில் வியப்பில்லை. இவர்கள் இந்தியா, இலங்கை பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்து காதிரிய்யாத் தரீக்காவின் சுடரை வெகுவாய் பரப்பினார்கள். அவர்கள் கட்டிய இபாதத்துகானுக்கள் ஸாலிஹ் தைக்கா என்ற பேர் புகழுடன் இன்றளவும் பலவிடங்களிலுள்ளன. எண்ணிலடங்காதோர் அவர்களின் முரீதுகளாயினர். அதிகமான கலீபாக்களும் அவர்களுக்கிருந்தார்கள். நமது முஹம்மது ஸாலிஹ் வலியவர்களுடனும் மற்றும் அவுலியாக்களுடனும் நற்கூட்டத்தில் நாயன் நம்மையாக்கி யருள அவுலியாக்களின் மஹப்பத்தையும், தரீக்காவின் பாசத்தையும், காமில்களான ஷைகுமார்களின் ஆத்மீகத் தொடர்பையும் தந்து அதன் மூலம் நமது அகத்தில் (மஃரிபா) ஞானம் என்ற வித்தை விதைத்து, பக்தி, பாசம் என்ற நீரும் உரமும் விட்டு, ஜிஹாது என்ற கலப்பையினால் கிளரி, நப்ஸானியத்து, ஷஹ்வத்து என்ற களைகளை பிடுங்கி, ஷவுகு, தவுகு, லிகா என்ற களஞ்சியங்களையும், தானியங்களையும், கனிகளையும் முழு மேனியாக அனுபவித்துப் பேரின்ப முக்தியுற அர்ஹமுர்ராஹிமீன் அன்பருள் பாலிப்பானாக. ஆமீன். நண்பர்களே ! ஆர்வம் என்ற காற்று மேலிழுத்துச் செல்கிறது. ஆனால், நபுஸு என்ற நங்கூரம் கீழே அழுத்துகிறது. துனியா என்ற துறைமுகத்தைவிட்டு அசைய அது மறுக்கிறது. அந்த நங்கூரத்தை தூக்க நமக்கு வலுவில்லை. வலுவுள்ள ஆசாமிகளைத் துணையாகக்கொண்டு கல்பு என்ற கப்பலை தரீக்கா என்ற தண் கடலில் செலுத்தல் வேண்டும். நமக்கு திசை தெரியாது; திக்குத் தெரியாது. திக்குத் திசை தெரிந்து கப்பலோட்டும் அனுபவமும் ஆற்றலும் பெற்ற ஷைகுமார்கள் என்னும் மாலுமிகளை வழி காட்டியாக நாம் கொண்டால் வெகு இனிதாகவும், எளிதாகவும் கரை காண்போம். ஜெயம் பெறுவோம்.



மஹான் முஹம்மது ஸாலிஹ் அவர்கள் தங்களது தந்தையவர்களுக்கு பலவிதங்களில் நேர்படவிருந்ததுபோல இறுதிக் கட்டத்திலும் இருந்த சமாச்சாரத்தை சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்

தைக்கா ஸாஹிபு அவர்கள் வபாத்து ஸபர் மாதம். வயது 81. முஹம்மது ஸாலிஹ் அப்பா அவர்கள் வபாத்தும் ஸபர் மாதமே. வயதும் எண்பத்தொன்றே. ஹிஜ்ரி 1323-ல் அவர்கள் பட்கலில் வபாத்தாகி அங்கேயே நல்லடக்கஞ் செய்யப்பட்டார்கள். இன்னாலில்லாஹி......... நண்பர்களே, நல்ல விஷயங்கள் பல பேச இச்சந்தர்ப்பம் கிட்டியதுபற்றி இறைவனுக்கு நன்றி செலுத்தி உங்களுக்கும் எனது வந்தனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கடுத்து மற்ற நண்பர்களும் பேசுவார்களென நம்புகிறேன். இத்துடன் எனது வார்த்தையை முடிக்கிறேன், வஸ்ஸலாம்.

*மு. மக்கீ* :— நேரம் அதிகமாகிவிட்டது. ஆகையால் இத்துடன் கூட்டத்தை முடிப்பது நலம்.

*அலாவுதீன்* :— ஆம். நமது பெற்றோர்களும் எதிர் பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஒரு சமயம் தேடிவந்தாலும் வந்துவிடுவார்கள். இதுகாறும் பிரஸ்தாபிக்கப்பட்ட மும்மணிகளான அவுலியாக்களைப்பற்றி வெகு அழகாக, தத்துவ பூர்வமாக நமது நண்பர்களான மும்மணிகள் எடுத்துரைத்தார்கள். அதுவே போதும். இதற்குமேலே நாங்கள் என்னதான் பேசப் போகிறோம் ?

*ஸயீது* :— நூஹு அவர்கள் ஒரு வாக்குச் சொன்னார்கள். அதை நிறைவேற்றினால் நலம்.

*நூஹ்* :— என்ன அது ?

*ஸயீது* :— ஒன்றுமில்லை. உமர்வலியவர்களின் 'எல்லாருங் கூடியிருக்குங் களரியிலே' என்ற பாடலைச் சொல்வதாகச் சொன்னீர்கள். ஆனால், சொல்லவில்லை ?

*நூஹ்* :— மறந்துவிட்டேன். ஆனால், 'நாம் யாவரும் சேர்ந்து பாடுவோம்' என்றே சொன்னேன். அப்பாடல் யாவும்

சொல்ல இப்போது நேரம் போதாது. ஆகையால், ஒரு சில வற்றை மாத்திரம் சொல்கிறேன். நீங்களும் சேர்ந்து சொல் லுங்கள். அது அழகான துஆவாகவும் அமைந்துவிடும்.

எல்லாருங் கூடியிருக்குங் களரியிலே
வல்லானைக் கண்டு மகிழ்ந்திருப்ப தென்னாளோ.

மல்லான போரும் விளையாட்டு மாமயக்கம்
எல்லாந் தவிர்ந்து இறைஞ்சுவது மெந்நாளோ.

காற்றை யடைத்திருக்குங் காயமதிலுன் னொளிவைப்
பார்த்து மகிழ்ந்து பரவுவது மெந்நாளோ.

பஞ்ச புலன்கள்செயும் பலதொழிலும் ஓர்தொழிலாய்
நெஞ்சகத்தில் நின்று நிலைப்பதுவு மெந்நாளோ.

வஞ்சத்தை நீக்கி வான்பொருளை என்றுமொரு
தஞ்சமெனக் கண்டிறைஞ்சித் தழுவுவது மெந்நாளோ.

ஆங்கார தத்துவத்தை அடக்கியு பாயமதாய்
தூங்காமறற்றூங்கி சுகம் பெறுவ தெந்நாளோ.

உன்ஸிபத்தை யெல்லா முற்றுணர்ந்து கற்றறியா
வஞ்சகத்தை நீக்கி வாழ்வதுவு மெந்நாளோ.

ஆதியநாதி யடங்கலு மொன்ரு யெழுந்த
சோதி வடிவைக் கண்டு தொழுவதுவுமெந்நாளோ.

வாக்கால் மனதால் வல்ல காயம்மதனல்
நோக்கால் காணுச்சுடரை நோக்குவது மெந்நாளோ

எண்சா ணுடம்பதனை யெரித்து வுனதருளை
இன்ஸான் குளிர இறைஞ்சுவது மெந்நாளோ.

அஞ்சான காயமழிந்து பணுவாகி
துஞ்சாத சோதியருள் துலங்குவது மெந்நாளோ.

தோலுந் துருத்தியுமாய்த் தொல்லுலகி லாகாமல்
ஆலமறுவாஹ தனிலாக்குவது மெந்நாளோ.

பொன்னசை மண்ணசை பெண்ணசை மேவாமல்
தன்னசையாலுனை நந்து சார்ந்திருப்பதெந்நாளோ.



உன்னசை என்னசை யொன்ரேடொன்று பிணங்காமல்
உன்னசையுணர்த்தி யொடுங்குவது மெந்நாளோ.

ஊணுல்தடித்து நித்தம் உன்னடியைப் பாராமல்
வீணுயுழலாமல் வெளி காண்பதெந்நாளோ.

காணுஞ் சொருபமெல்லாங் கத்தன் மலுஹறென்று
பேணிஷுஹூதுசெய்து பெலப்படும் நாளெந்நாளோ.

அம்மாரத்தெனும் நபுஸை யடக்கியதிஞங்காரத்
துன்மார்க்கத்தைத் துரத்தி துலங்கு நாளெந்நாளோ.

மிக்க லவ்வாமாவும் மிகைக்கு முல்ஹிமா நபுஸும்
ஒக்க முத்மஇன்னவில் ஒடுங்கும் நாளெந்நாளோ.

ஆஷிகுல் உஜூதாகி ஆரிபுல் உஜூததன்பின்
வாஜிபுல் உஜூதாக வருந்து நாளெந்நாளோ.

பூவிலுறை வாசமதுபோல என்னுள்ளமதில்
ஹூவைக்குடியிருத்திக் கூடும்நாளெந்நாளோ.

ஷரீஅத்தும் ஹக்கீகத்தும் தன் சரீரமுயிரும்போல்
தரீகத்தாம் பெஹ்றுதன்னைத் தாண்டு நாளெந்நாளோ.

ஹாமீம் ஐன் ஸீன் காபும் காபுஹாயா ஐன் ஸாதும்
காமில் முகம்மில் குருகாட்டும் நாளெந்நாளோ.

மந்திரமாங்கலிமாவை மறவாமலேயெனது
சிந்தைதனில் வைக்க வருள்செய்யும் நாளெந்நாளோ.

குல்லுன் லஹூகானித்தூனென்ற சொல்லதனில்
அல்லும் பகலுமமையு நாளெந்நாளோ.

நான் என்பதைப் பார்க்கில் நான் என்பதைக் காணேன்.
தானென்பதிற் கூடித் ததும்பி நிற்பதெந்நாளோ.

கோனுங் குடிபதியுங் குல்லுமவன் தானென
தேன் இன்பத்தை யருந்தி தெவிட்டு நாளெந்நாளோ.

(எல்லாருங் கூடியிருக்குங் களரியிலே .....)

*பதுருஸ்ஸமான்* :— நண்பர்களே! இதுகாறும் ஞானப் பூங்காவின் நறுமணத்தை யனுபவித்து பேரின்பச் சுனை நீரையும்

இன்பக் கனிகளையும் புசிப்பதற்கு உதவி செய்த அல்லாஹ்வுக்கு நாம் மனப்பூர்வமாக நன்றி செலுத்துவோமாக. அவுலியாக்களைப் பற்றி எல்லாம் பேசினோம். இனி நாம் செய்யவேண்டியது யாதுஎன்பதையும் நோட்டமிடல் வேண்டும் அவுலியாக்களைக் கொண்டாடும் நாம் அவர்களை பின்பற்ற வேண்டும். அவர்களின் புனித வாழ்க்கையின் சில அம்சங்களையாவது நம்மில் மலரச்செய்யவேண்டும். அவர்களுக்கிருந்த சன்மார்க்கப்பற்றில் பத்திலொன்ருவது — நூற்றிலொன்ருவது ஆயிரத்திலொன்ருவது நம்மில் மலரவேண்டும். ஏழையன்பராய், பொதுஜன சேவகராய், குமர்களை கரைசேர்ப்பவராய் அவர்கள் புரிந்த தொண்டை நாமும் செய்யவேண்டும். அனுச்சாரம், மார்க்கமுரண், மூர்க்கத்தனம், வேற்றுமைப் பூசல் ஆகிய துற்குணங்களையும், ஆபாசச் செயல்களையும் நம்மிலிருந்து நீக்கி நம்மையும் பிறரையும் பரிசுத்தப்படுத்த வேண்டும். தயவு தாட்சணியம் பாராது நன்மைகொண்டு ஏவி தீயதைவிலக்கவேண்டும். நாமும் ஆத்மவிசாரணை செய்து இறைவழிபாட்டில் இன்பம் பெற முயலவேண்டும். இத்தகைய நற்செயல்களின் மூலமே இறையருளும், நாதாக்களின் நல்லாசியும் நமக்குக் கிடைக்கும்.

தைக்கா ஸாகிபு நாயகமவர்களின் உத்தம சீடரும், குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்களின் நண்பருமான ஷெய்கு அப்துல்காதிர் லெப்பை ஆலிம் புலவர் அவர்களின் சொர்க்கநீதி மாலையில் ஒன்றே யொன்றைச் சொல்லி விளக்கி முடிப்போமாக.

அஞ்சொகுத்தும் தப்பாமல் தொழுக வேண்டும்
அதற்கிடையினபில் தொழுகை எடுக்கவேண்டும்
வஞ்சமறப்பெரு நோன்பு பிடிக்கவேண்டும்
வரிசைபெறும் வெள்ளிதிங்கள் முழிக்கவேண்டும்
தஞ்சமெனப் பெரியோர்சொல் லெடுக்கவேண்டும்
தப்பாமல் திகிர்வழக்கஞ் செய்யவேண்டும்.

ஐங்காலத் தொழுகைகளையும் தவருது அனுஷ்டித்து, அத்துடன் ஸுன்னத்து, நபிலு ஆகிய வணக்கங்களையும் புரிய வேண்டும். அவ்வாறே சங்கையான நோன்பையும் பிடித்து



அதன்மூலம் நெஞ்சத்திலுள்ள கெட்ட குணங்கள் யாவற்றையும் நீக்கிப்போட வேண்டும். அவுலியாக்கள் இரவெல்லாம் விழித்து வணங்கினுர்கள் என்பதைப் பேசித்தீர்த்து விடுவதோடு நின்றுவிடாமல் நாமும் இராக்காலங்களில் விழித்து வணங்க முனைய வேண்டும். வாரமுழுவதும் அப்படிச் செய்ய ஆரம்பத்தில் இயலாதிருப்பின் சங்கையான வெள்ளி திங்கள் இரவுகளிலாவது விழித்து வணக்கம் புரிந்து பழகவேண்டும், அவ்வுணர்ச்சியை ஊட்டுவதற்காகவே அநேக இடங்களில் வெள்ளி, திங்கள் இரவுகளில் திக்ரு, ராத்திபு மஜ்லிசுகள் நடத்தப் படுகின்றன.

காமில்களான ஷைகுமார்களிடம் சகவாசித்து நெருங்கிப் பழகி அவர்களிடம் தஞ்சம் புகுந்து அவர்களின் போதனைகளைப் பெற்று மறவாமல், மாருமல் ஒழுகி நடக்க வேண்டும். தப்பாமல் திக்ரு வழக்கஞ் செய்ய வேண்டும். க்ஷணப்பொழுதேனும் இறைவனை மறந்திருத்தலாகாது. அத்தகைய உயர் வம்சங்களை இதயத்தில் உண்டுபண்ணுவதற்கனுசரணையாக அதபு ஒழுக்கத்துடனுள்ள திக்ரு மஜ்லிசுகளில் சேர்ந்து திக்ரு செய்து வரவேண்டும். திக்ரு வகைகள் மூன்று. (1) நாவால் செய்யப்படுவது. (2) இதயத்தால் செய்யப்படுவது. (3) ஆத்மாவால் செய்யப்படுவது. மற்றும் மூன்று வகையாகவும் கூறப்படுகிறது. (1) இருதயத்தால் மறந்து நாவால் மாத்திரம் செய்வது. இது சாதாரண (அவாம்) ஜனங்கள் செய்யும் வகை. இருதயத்தால் மறந்த குற்றம் இதில் ஏற்படவும் கூடும். வாயால் பாபமான பழக்கம் பேசாமல் திக்ரையாவது மொழிந்து கொண்டிருந்த ஓர் நல்லகாரியமாவது இதில் கிடைக்கவும் கூடும். (2) இதயபூர்வமாக நாவால் செய்யப்படுவது. இது நல் வணக்கமுடையாரின் இபாதத்தாகும். கவாஸ்ஸுகளுடைய திக்ரு இது (3) சர்வ உறுப்புக்களும், அங்கங்களும் சேர்ந்து செய்யப்படும் அகமியத்தான திக்ரு. இதை மஹப்பத்துடைய திக்ரு என்றும், மஃரிபா உடைய திக்ரு என்றும் சொல்லப்படும். இது தனிப் பெருஞ் சிறப்பு பெற்ற கவாஸ்ஸுல் கவாஸ்களின் திக்ரு வகையாகும். திக்ருடைய (ஹக்கீகத்து) யதார்த்தம் யாதெனில்

நீ அல்லாஹ்வை திக்ரு செய்து அவனல்லாத சர்வ வஸ்துக்களையும் மறந்து இழந்திருப்பதுவே என்று சில அவுலியாக்கள் உரைத்துள்ளார்கள்.

"யதார்த்தத்தில் அல்லாஹ்வை எவன் திக்ரு செய்கிறானோ அவன் சர்வ வஸ்துக்களையும் மறந்து விடுகிறான். அவனுக்கு எல்லாவஸ்துக்களையும் அல்லாஹ்பாதுகாத்துக் கொடுக்கிறான்" என்று துன்னூன் மிஸ்ரீ (ரலி) கூறி இருக்கிறார்கள். இவ்வாறான திக்ரினால்தான் மனச்சாந்தி கிட்டுகிறது. (அலா பிதிக்ரில்லாஹி தத்மயின்னுல் குலூப்) "அல்லாஹ்வின் திக்ரினாலே உள்ளங்கள் நிம்மதியடைகின்றன." என்பது குர்ஆன் வசனம். அத்தகைய நிம்மதியான திக்ரு செய்ய நாம் ஆசைப்பட்டு பாடுபட வேண்டும்.

மஞ்சணியுங் குழல் கதிஜா வரிசை நாதர்
மணி முத்தின் மஹ்மூதை வாழ்த்தாய் நெஞ்சே.

பெருமானார் அவர்களின் திருப்புகழைச் சொல்லி வாழ்த்திக் கொண்டிருப்பாயாக நெஞ்சமே என்று புலவர் பெருமான் சொர்க்க நீதி மாலை ஒவ்வொன்றையும் முடிக்கிறார்கள்.

கைர். யாறஹ்மானே' எங்களனைவருக்கும் நல்லுதவி புரிவாயாக. எங்களனைவரின் பிழைகளையும், பெற்றோர்களின் பிழைகளையும் பொறுத்தருளி முஸ்லிம் ஆண் பெண் யாவருக்கும் நல்லருள் பாலிப்பாயாக. எங்கள் ஷெய்குமார்களுக்கும், உஸ்தாதுமார்களுக்கும் நல்லனுக்கிரஹம் புரிவாயாக. இங்கு குழுமியுள்ள எங்கள் நண்பர்கள் யாவருக்கும், எனக்கும் (தவ்பீக்) நல்லுதவிக்கட்டளை செய்வாயாக. ஆமீன் (ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ... மும்முறை செருல்லிய கண்ணீர் வழிந்தோட நண்பர்கள் [illegible] முஸாபஹா செய்து தங்களது இல்லங்களுக்கு வருகிறார்கள்.)

[ சமர்ப்பணம் ]

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி

Q7WX
N56
113688